மூலிகைமணி



(பட விளக்கம்)
சிறுசின்னி இலை
10 முதல் 20 வரை
எடுத்து மிளகு 6
சீரகம் 2 சிட்டிகை
வைத்து அரைத்து
தினம் காலை 1 வேளை
வாயிலிட்டு மோர்
அருந்தி வர
பார்த்தினியத்தின்
விஷம் முறியும்.

விலை ரூ 1-50

பார்த்தீனியத்தின் விஷத்தை முறிக்கும்
மூலிகைகள் - சிறப்புக் கட்டுரை பக்கம்-17.

மூலிகை வளர்ப்போம் ! உடல் நலம் காப்போம் !

'மூலிகை மணி'

18 ஆண்டுகளாக மூலிகை வளம் பாடும்
சித்த மருத்துவ மாத இதழ்

நிறுவன ஆசிரியர் : அமரர் வேலூர் டாக்டர். ஏ. ஆர். கண்ணப்பர்.

ஆசிரியர் : வேலூர் டாக்டர். க. வேங்கடேசன், எம்.ஏ. பிஎச்.டி.

தனி இதழ் விலை	ரூ.	1-50
ஆண்டு சந்தா	ரூ.	18-00
ஆயுள் சந்தா	ரூ.	251-00

ஆயுள் சந்தா செலுத்துவோர்க்கு 1971 முதல் 1981 வரையில் வெளிவந்துள்ள 'மூலிகை மணி' இதழ்களின் தொகுப்புகள் 10 வால்யூம்களாகப் பைண்ட் செய்யப்பட்டவை - அன்பளிப்பாகத் தரப்படும். தொடர்ந்து மாதந்தோறும் மூலிகை மணி அனுப்பப்படும்.

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி

வேலூர் டாக்டர். க. வேங்கடேசன், எம். ஏ., பிஎச். டி.,
ஆசிரியர் : மூலிகை மணி
மூலிகை மணி தோட்டம்,
4, இரண்டாவது சாதுகார மடம் வீதி,
சலவன்பேட்டை, வேலூர் - 632001.

வேலூர் மூலிகை மணி ஆசிரியருடன் தொலைபேசி தொடர்பு கொள்ள **23551** எனும் எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

உ

சிவமயம்

வச்சரபஞ்சரமென்னும்

சக்தி கவசம்.

அங்கையிற் கரகந்தாங்கும் பிரமாணி யருளினோடுந்
துங்கமென் சென்னிகாக்க வயிணவிதுகளிலாக
மெங்கணும்காக்கசெய்ய வேந்தெழு லுருத்திராணி
தங்குமெண்டிசையுமன்பு தழைத்திடவினிதுகாக்க.

கொன்னுனைச் சூலிசென்னிமயிரினைக் குறித்துக்காக்க
மன்னுவெண்பிறைதாழ் சென்னிவயங்கொளிநெற்றிக்
காக்க,பன்மயிர்புருவநாளும்பரிவொடுமுமையாள்காக்க
வென்னையாண்முக்கணீசனிறைவிகண்ணிணைகள்காக்க.

வயமிகுமிமயவல்லி மூக்கினை மகிழ்ந்துகாக்க
செயையொடு விசயைமேல்கீ ழிதழினைச் சிறந்துகாக்க
வயிலுடைச்சுருதிதூய வஞ்செவி காக்கதண்ணெண்
பயின்மலருறையுஞ்செல்வி பல்வினையுவந்துகாக்க

சண்டிமென் கபோலங்காக்க தவளநாண்மலரின்வைகு
மொண்டொடி நன்னுக்காக்க விசயைமங்கலைமற்றெவ்
வா,கண்கவர்நாடிகாக்க காத்தியா யனியஞ்ஞான்று
முண்டக மலரிற்றூய முகத்தினைச் சிறந்துகாக்க,

காளமுண் டிருண்டநீல கண்டிமென் கழுத்துக்காக்க
கோளில்பூ தாரசத்தி சுவர்புறங் காக்ககூர்மி
நீளொளிச் சந்திகாக்க வயிந்திரி நெறியினோடுந்
தோளிணை காக்கபத்மை துணைமல ரங்கைகாக்க,

கமலகை விரல்கள்காக்க விரசகை யுகிர்கள்காக்க
திமிரமுண்டொளிரும்வெய்யோன் மண்டலத்துறையுஞ் செல்வி

யெமதிருவாகு மூலங்காக்க வானவர்களேத்த
வமிர்தலகரிநாணுளு மகன்மணி மார்புகாக்க.

தரித்திரியிதயங்காக்கதயித்தியாச்செகுப்போண் மிக்க
கருத்தொடுமுலைகள்காக்க சகத்தினிலிறமைபூண்டோ
டிருத்தகுவயிறுகாக்க திகழ்ந்தபோ கதின்னுள்ளத்
தருத்தியனுந்திகாக்க வசைவளர் முதுகுகாக்க.

கருதருளிகடைகாக்க கடிதலம்பாமைவாய்த்த
குருமணிச்சகனங்காக்க குகாரணி குய்யங்காக்க
வருடரவருமபாய சுந்தினியபானங்காக்க
தெருளுடைவிபுலையென்றுஞ்சிறப்புடைகுறங்குகாக்க

லளிதைமென்முழந்தாள்காக்கவியற்சபை கணேக்கால்
காக்க, களிதருகோரைவாய்ந்தபரட்டினேக்காக்க, மிக்க
வளிகொள்பாதலத்திற்செல்வோ ளணிகெழுபுறந்தாள்
காக்க, வொளிர்நகம்விரல்கள்சந்திரியுக்கரியுவந்துகாக்க

தலத்துறைமடந்தையுள்ளங்காலினே காக்க தண்ணென்
மலர்த்திருமனேயைக்காக்கவயங்கு கேத்திரதையோங்கி
யுலப்பில்கேந்திரங்கள்காக்க பிரியகரையொழிவருது
நலத்தகு மக்கடம்மை நன்குறக்காக்கவன்றே.

உயர்சஞ தனியெஞ்ஞான்று மொழிவறு மாயுள்காக்க
மயர்வறு கீர்த்தியாவு மாதேவிகாக்க மிக்க
செயிரறு தருமம்யாவுந் தனுத்திரிசிறந்துகாக்க
வியல்புடைக் குலத்தைவாய்ந்த குலதேவியினிதுகாக்க

சற்கதிபிரகைநல்லோ ரியைபினேத்கயாவிற்காக்க
விற்கொடும் போரினீரில் வெளியினில்வனத்திற்சூதி
விற்புற மதனிலோங்கு சர்வாணிகாக்கவென்னுப்
பெற்றரு மலர்கடுவிப் புக்கவரேத்திரனுரே.

குறிப்பு : இந்தவச்சிரபஞ்சரத்தை யாவர்செபித்தாலும், அவர்களுடைய தேகத்திலுண்டாகிய வெப்புநோயொழியும். எட்டுதரம் சலத்தில் மந்திரித்து அதனைஉட்கொண்டால், வயிற்றிலே பொருந்திய குன்மஞ்சூலை முதலியநோயனைத்தும் நீங்கும். இரவில் வழிநடக்கும்போது செபித்தால், பூதம், பேய் இவைகள் தொடர மாட்டாவாம். பிள்ளையைப் பெறமாட்டாமல் வருந்தப்படுகின்ற மாதருடைய அருகிலிருந்து செபித்தாலும், அல்லது நீரிலோதி உட்கொள்ளக்கொடுத்தாலும் விரைவிலே வருத்தம் நீங்கிப் பிள்ளைகளைப்பெறுவார்கள். யுத்தத்திலே செபித்தால் சத்துருக்கள் தோல்வியடைவார்கள். சிறுபிள்ளைகளுக்கு நீரிலோதி உட்கொள்ளக் கொடுத்தால், வியாதிநீங்கும். இதை யாவரோதினுலும். அவர்களை உமாதேவி காப்பாற்றுவாள்.

உ

மூலிகை வளமே ! முருகா நாட்டு வளம் !!

ஐந்துகரத்தனை யானைமுகத்தனை இந்தினிளம்பிறை போலு மெயிற்றனை
நந்திமகன்தனை ஞானக் கொழுந்தினை புந்தியில் வைத்தடிபோற்றுகின்றேனே.

மூலிகை மணி

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல்
வேறொன்றறியேன் பராபரமே !

மலர் 18] ருத்ரோத்காரி ஆண்டு புரட்டாசி - ஐப்பசி [இதழ் 10
(செப்டம்பர்–அக்டோபர் 83)

வேண்டுகோள்

அன்பார்ந்த வாசகர்களே ! வணக்கம்.

1981-ஆம் ஆண்டு ஆகஸ்டு மூலிகைமணி இதழில், மாண்புமிகு முதல்வர் அவர்கட்கு 'சித்த மருத்துவ வளர்ச்சி வாரியம்' அமைக்குமாறு வேண்டி விரிவானதொரு அறிக்கையை அனுப்பி இருந்தேன். கடந்த மாதம் முதல்வர் அவர்கள் அவ்வாறே 'வாரியம்' அமைத்துள்ளார்கள். அதற்காக 'மூலிகைமணி' சார்பில் நன்றியையும், பாராட்டுதலையும் முதல்வர் அவர்கட்குத் தெரிவித்துக் கொள்கின்றேன். திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களைத் தலைவராகக் கொண்டு 21 உறுப்பினர்களைக் கொண்டு உருவாகியுள்ளது இவ் வாரியம். வாரியம் பற்றிய செய்தியை நாளிதழ்களில் படித்த பலர் — 'நீங்கள் ஏன் இதில் இடம்பெறவில்லை' என்று நேரிலும், கடிதம் மூலமும் என்னை கேட்கின்றனர்.

இதற்குரிய விரிவான விளக்கத்தினை 9-ஆம் பக்கக் கட்டுரையில் காணலாம். தனிப்பட்ட எவரையும் பதவி வேட்கைக்காக வழிபடும் குணம் என் பரம்பரைக்கே இருந்ததில்லை. சித்த மருத்துவத்தின்

வளர்ச்சிக்காக அறிவு பூர்வமாக பாடுபடும் எவரும் என் வழிபாட்டுக்கு உரியவர்கள். இதற்கு மாறாக, 'நகம் முளைத்த நாள் முதலாக சித்த மருத்துவம் தெரியும்' என்று பொய்மொழி பேசி 'ஊடுருவல் தலைவராக' உலா வருபவர்களின் முகத்திரையைக் கிழிப்பது என் கடமை மட்டு மல்ல; சித்த மருத்துவத்தின் உண்மையான வளர்ச்சிக்குரிய பாதுகாப்பு மாகும். கடந்த 20 ஆண்டுக்காலமாக எவ்வளவோ இடர்களுக்கு இடையே - சித்த மருத்துவ வளர்ச்சிக்கு உரமாக, வேலியாக, பணி யாற்றிவரும் 'மூலிகை மணி'யின் அரிய சேவைகளை அரசாங்கம் நடத்தும் அமைச்சர்கள் முதல் தமிழகத்தின் மூலை முடுக்குகளில் சித்த மருத்துவத்தை அன்றாடம் பயன்படுத்தும் ஏழை எளியோர் வரை நன்கு உணர்வார்கள்.

'சித்த மருத்துவமா? - அது செத்த மருத்துவ மாயிற்றே!' என்று பலர் கேலி பேசிய நாட்களில்

'தன் உயிர், உடமைகளைக் கொடுத்து சித்த மருத்துவத்தை வாழவைத்த பெருமை-மூலிகைமணி பரம்பரைக்கு உண்டு' - என்பது 20 ஆண்டுக்கால வரலாறு உணர்த்தும் உண்மை.

'முழுப் பூசணிக்காயைக் கூட சோற்றில் மறைத்து விடலாம்,

மூலிகைமணியின் சேவையை மறைக்க முயல்வது முடத்தனம் மட்டுமல்ல; மூதேவித்தனமுமாகும்.

எமது வளர்ச்சியில் பொறாமையும் அச்சமும் கொண்டுள்ள சிலருடைய தூண்டுதலால் வாரியத்தில் நான் இடம் பெறுவது தடுக்கப்பட்டுள்ளது.

என்றாலும் என் பணிகள் இவர்களின் சூழ்ச்சியால் தாம தப்படுத்தப்படுமே தவிர; தகர்க்கக் கூடியதல்ல.

நான் வாரியத்தில் இடம் பெறாதது குறித்து — சித்த மருத்துவ வளர்ச்சியில் அக்கரையுள்ள நல்ல உள்ளங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர். வாசகர்களாகிய நீங்களும், சித்த மருத்துவ வளர்ச்சி வாரியம்' அமைக்க வேண்டுமென்று முதன்முதலாக

குரல் கொடுத்த என்னையும் - வாரியத்தில் பணியாற்ற ஓர் உறுப்பினராக நியமிக்குமாறு முதல்வர்க்கு எழுதவும்.

திரு. பரமசிவம், I.A.S., அவர்கள்
மாண்புமிகு முதல்வர் அவர்களின் தனி செயலர்,
தலைமைச் செயலகம்,
தமிழக அரசு - சென்னை - 600009.

எனும் முகவரிக்கு மடல் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்

குறிப்பு: இவ்வுறுப்பினர் பதவிக்கு நான் ஆரம்பத்தில் அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை. நான் உண்டு; என் ஆராய்ச்சிப் பணிகள் உண்டு என்றிருந்தேன். என் பெயரை உறுப்பினர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று சிலர் முன்மொழிந்தபோது - தக்க காரணமின்றி மறுக்கப் பட்டதாக அறிந்தேன். அதன் பின்னர்தான் இப்பிரச்னை யில் ஈடுபடலானேன். மேலும், இப்போது உறுப்பினராக நியமிக்கப் பட்டுள்ளவர்களைவிட எவ்விதத்திலும் தகுதியில், திறமையில், எள்ளளவும் தாழ்ந்தவனல்ல. அனைத்துக்கும் மேலாக

யாரும் சிந்தித்து செயல்படாது ஒதுக்கி வைத்துள்ள மத்திய அரசு அறிவித்த திட்டமான 'NATIONAL INSTITUTE OF SIDDHA' எனும் அமைப்பைப் பற்றி இவ்வாரியத்தின் மூல மாகவேணும் தமிழகத்தில் நடைமுறைப் படுத்த முயலலாம் என்ற ஒரே நோக்கத்திற்காக இவ்வாரி யத்தில் இடம்பெற விழைகிறேன்.

என் மூலம் உங்கள் குரல் ஒலிக்கவும், அதன் மூலம் சித்த மருத்துவம் செழிக்கவும் முதல்வர்க்கு மடல் எழுதுங்கள்.

அன்பன்,
க. வேங்கடேசன்.

அனுபவம் உணர்த்தும் உண்மை

வாய்வுத் தொல்லை நீங்கியது

அன்புள்ள டாக்டர் க. வேங்கடேசன் அவர்கட்கு, மதுரையில் தங்களைச் சந்தித்து என்னுடைய வாய்வுத் தொல்லை மற்றும் சர்ம நோய்த் தொல்லைக்குத் தங்களிடம் மருந்து சாப்பிட்டதில் நன்கு குணம் அடைந்துள்ளேன்.

இரா. பொன்னுசாமி,
ராஜபாளையம்.

ஆஸ்துமா தணிந்தது

டாக்டர் க. வே. அவர்கட்கு, வணக்கம்,

மதுரை முகாமில் ஆஸ்துமா தொல்லைக்காக என்னுடைய அண்ணி அவர்கட்குத் தங்களிடம் மருந்து வாங்கிக் கொடுத்ததில் நல்ல முன்னேற்றம் தெரிகிறது.

நன்றியுடன்,
எம். இராமையா,
ராமசாமி ராஜாநகர்.

சவால் விட்ட சர்ம நோய் அடியோடு குணம்

ஐயா,

கடந்த 3 மாதங்களுக்குமுன் நான் சர்ம நோயால் பாதிக்கப்பட்டு, சென்னையிலுள்ள பெரிய சர்மநோய் நிபுணர்கள் பார்த்தும் குணமாகாமல், மேலும் மோசமாகி, கால்களில் இரத்தமும் சீழும் கலந்து வீங்கி கொப்புளங்கள் தோன்றி நீராக வடிந்து எல்லோரும் கைவிட்ட நிலையில் தங்களைக் கோவையில் சந்தித்து உங்களின் ஒப்பற்ற மருந்தால் தொடர்ந்து 3 மாதம் மருந்து சாப்பிட்டு - இப்போது 90 விழுக்காடு குணமடைந்து பழையபடி நன்னிலையில்

செயல்படுகிறேன், தங்களின் கைராசியான மூலிகை மருத்துவத்தில் என் சர்ம நோய் நீங்கியது குறித்து மகிழ்ச்சியும், நிம்மதியும் அடைகிறேன்.

கிருஷ்ணன்,
கோவை-12.

மூட்டுவலி விலகியது

தங்களிடம் என்னுடைய நெடுநாள் தொல்லையான மூட்டுவலி, வீக்கம் ஆகியவற்றிற்கு 1 மாதம் மருந்து சாப்பிட்டு குணம் கண்டேன். மீண்டும் 1 மாதம் மருந்து அனுப்பி வைக்கவும்.

சாரதாம்பாள்,
பொன்னை.

வெண்மேகம் மறைகின்றது

என் முகம், கழுத்துப் பகுதிகளில் கடந்த 5 ஆண்டுகளாகப் படர்ந்து வந்த 'வெண்மேகம்' தங்களிடம் 1 வருடமாக மருந்து சாப்பிட்டதில் பாதியளவு குணமாகியுள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செல்வி சுந்தரி,
மதுரை.

நெடுநாள் மூக்கடைப்பு (சைனஸ்) நீங்கியது

என் அண்ணன் மகன் 'சைனஸ்' எனும் மூக்கடைப்பு நோயால் நெடுநாள் அவதிப்பட்டான். பல டாக்டர்களிடம் சிகிச்சை பெற்றும் குணமாகாத நிலையில் மதுரையில் தங்களிடம் தொடர்ந்து 2 மாதம் மருந்து சாப்பிட்டதில் தற்போது மூக்கடைப்பு நீங்கி நன்குக உள்ளான். ஆங்கில மருத்துவர்களே இது எப்படி சரியாயிற்று என்று ஆச்சரியப்படுமளவுக்கு மூக்கடைப்பு நீங்கியுள்ளதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறேன்.

கருப்பையா,
மதுரை

என்ன செய்யலாம்?

மாதவிலக்குத் தொல்லைகளுக்கு

∴ 25 (அ) 30 நாட்களுக்கு ஒருமுறை வரும் மாதவிலக்கு தொல்லையில்லாததாகும். இதற்கு மாறுபட்டு வந்தால் தொல்லை உடையதாகும்.

∴ மாதந்தோறும் தாமதமாகவும், மாதமிரு முறை வருவது கருப்பைக் கோளாற்றினைக் குறிப்பதாகும்.

∴ தொடக்கத்தில் வாரம் 1 மாதுளம் பழம் சாப்பிட்டு வரவும். அதன் ஓட்டினைக்கூட வீணாக்காமல் கஷாயம் செய்து சாப்பிடலாம்.

∴ இரத்த சோகை காரணமாக மாதவிலக்கு சிலருக்கு 2 (அ) 3 மாதத்திற்கொருமுறை வரலாம். இவர்கள் உடனடியாக அதனைப்போக்க வல்ல இரும்புச்சத்து, புரோட்டீன் சத்துள்ள உணவை அதிக அளவில் உண்ணவேண்டும். அலட்சியப்படுத்தக் கூடாது.

∴ மாதவிலக்கு 3 முதல் 5 நாட்கள் நீடிக்கும். அதற்குமேல் நீடித்தால் கருப்பை வாய்ப்புறம் அழற்சி அல்லது புண்ணாகி இருக்கும் இதற்குத் தக்க சித்த மருந்துகளைச் சாப்பிடலாம்.

∴ மாதவிலக்கு வரும்போது வயிற்றுவலி, இடுப்புவலி வரும். இதனை வரவொட்டாமல் இருக்க முருங்கை ஈர்க்கு, பூண்டு, பெருங்காயம் சேர்த்துக் கஷாயமிட்டு மூன்று நாள் பருகலாம்

∴ அசோக மரப்பட்டை, மருத மரப்பட்டை—இவற்றைச் சிதைத்து கஷாமியட்டு வாரம் 1 நாள் பருகிவர - வலிமையற்ற கருப்பை வலிமை பெறும்.

∴ மாதவிலக்கு நீடிக்கும்போது - வாழைப்பூ கஷாயம், பொட்டுக் கடலை 1 பிடி ஆகியன சாப்பிடக் கட்டுப்படும்.

∴ மாதவிலக்கின்போது ஆஸ்பிரின் மாத்திரைகள் சாப்பிடக்கூடாது.

∴ மாதவிலக்கின்போது தூய்மையாகவும், சத்துணவு உண்டும்; கூடியளவு ஓய்வாகவும் இருத்தல் நல்லது.

∴ மாதவிலக்கிற்குப்பின் 8-வது நாள்முதல் உடலுறவு கொள்வது வேறு பல நோய்கள் வராதிருக்க உதவும்.

— ருக்மணி வேங்கடேசன், பி.ஏ.,பி.டி.,

சித்த மருத்துவ வளர்ச்சி வாரியம் முதல்வர்க்கு வேண்டுகோள்.

கடந்த இரண்டாண்டுகட்குமுன் முதல்வர் அவர்கள் 'சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழு' ஒன்றினை அமைத்தார்கள். இக்குழுவின் நியமனம் பயன் தராது என்றும், அதற்குப் பதிலாக 'சித்த மருத்துவ வளர்ச்சி வாரியம்' அமைக்குமாறு அப்போதே முதல்வர்க்கு வேண்டுகோள் விடுத்திருந்தேன்; இரண்டாண்டுகளாகப் பரிசீலனை செய்தபின் எனது வேண்டுகோளினை ஏற்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் 'வாரியம்' அமைத்துள்ளார். முன்பு இயங்கிய 'ஆலோசனைக் குழு'வின் அதே தலைவரையும், உறுப்பினர்களில் (என்னையும், மைய ஆய்வுக் கழக உதவி இயக்குனர் டாக்டர் வேலுச்சாமியையும் நீக்கிவிட்டு) 14 பேரை இவ்வாரியத்தில் சேர்த்துள்ளனர். 'சித்த மருத்துவ வளர்ச்சி வாரியம்' என்ற அமைப்பினை உருவாக்க வேண்டும் என்று முதல் முதலாகக் குரல்கொடுத்த எனக்கு 'வாரியத்தில்' உறுப்பினராகக்கூட இடமளிக்க மறுக்கப் பட்டுள்ளது குறித்து, மாண்புமிகு முதல்வரின் கவனத்திற்கு பின் வருமாறு கொண்டு வந்துள்ளேன். தக்கன செய்வார் என்று நம்புகிறேன்.

— க. வே.

சித்த மருத்துவத்தின் பெயரைச்சொல்லிச் சிறப்பினைச் சேர்த்துக் கொண்டோர் - சில்லரை பார்த்துக் கொண்டோர்- சிலரைப் போலல்லாமல், சித்த மருத்துவத்தின் வளர்ச்சிக் காகவே நெடுங்காலமாகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் திருமிகு டாக்டர் க. வேங்கடேசன் அவர்கள் என்பதை எல்லா நாட்டுத் தமிழர்களும் ஏக காலத்தில் ஒத்துக்கொள்ளுவார்கள்.

'மூலிகை மணி' என்கிற மூவாத - மூத்தாலும் முதிர்ந் துதிராத - அவரது சீரிளமைத் திறம் வாய்ந்த செவ்விதழ் வாயிலாக தமிழுலகம் வார்த்தைகளில் வடிக்க இயலாத வரலாற்றுப் பலன்களைப் பெற்று வருகிறது.

— 'தாய்' வலம்புரி ஜான்

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கட்கு வணக்கம் !

1981-ஆம் ஆண்டு சித்த மருத்துவ வளர்ச்சிக்கென தனி வாரியம் ஒன்றினை அமைக்கக் கோரி யான் விடுத்த வேண்டுகோளினைத் தாங்கள் ஏற்று கடந்த மாதம் அதனை நிறைவேற்றியுள்ளமை குறித்து 'மூலிகை மணி' வாசகர்கள் சார்பில் நன்றியும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாரியத்தினை உருவாக்கியுள்ள முறையில் கீழ்க்கண்ட மாற்றங்களைச் செய்தால், வாரியம் சுதந்திர மாகவும் துரிதமாகவும் செயல்பட இயலும் என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தற்போது உருவாக்கப்பட்டுள்ள வாரியம், மக்கள் நல்வாழ்வுத் துறையின் கீழ் செயல்படுவது நன்றன்று. இந்திய மருத்துவத்துறை, சத்துணவுத் திட்டம், மூலிகை வாரியம், சித்த மருத்துவ வளர்ச்சி வாரியம் இந்நான்கினையும் இணைத்து ஓர் அமைச்சகமாக உருவாக்கி அதனைத் தற்போது சத்துணவுத் திட்ட அமைச்சராக விளங்கி வரும் மாண்புமிகு திருச்சி ஆர். சௌந்திரராசன் அவர்களின் நேரடிப்பார்வையில் இயங்குமாறு அமைத்து உதவ வேண்டுகிறேன். மக்கள் நல்வாழ்வுத்துறை மிகப்பெரிய அளவில் உள்ள அமைச்சகத்துறை. அதில் வளர்ந்து வரும் சித்த மருத்துவத் துறையினைச் சேர்ப்பதால் போதிய நிதி ஒதுக்கீடுகளும், திட்டச்செலவிடுகளும் பெறவாய்ப்பின்றிப் போகும். எனவே

இந்திய மருத்துவத்துறை
சத்துணவுத்திட்டம்
சித்த மருத்துவ வளர்ச்சி வாரியம்
மூலிகைப்பண்ணை வாரியம்

ஆகியவற்றை ஒருங்கிணைத்து 'சத்துணவு மற்றும் உள் நாட்டு மருத்துவ முறைகள் வளர்ச்சித் துறை' என்றொரு புதிய அமைச்சகத் துறையினை உருவாக்க வேண்டுகிறேன்.

சித்த மருத்துவ வளர்ச்சி வாரிய அமைப்பில் ஆறு பேர் Official Members 14 பேர் Non Official Member களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

Offical Member-எனும் தலைப்பில் மைய அரசின் சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலைய உதவிஇயக்குனர் டாக்டர் **வேலுச்சாமி** அவர்களையும் ஓர் உறுப்பினராக சேர்க்க வேண்டியது இன்றியமையாததாகும். தமிழகத்தில் மைய அரசு ஆற்றவேண்டிய: சித்த மருத்துவ ஆய்வுத்திட்டங்களைப் பற்றிய பணி அறிக்கை / திட்டமிடுதல் போன்றவற்றைச் செவ்வனே செய்து வரும் டாக்டர் வேலுச்சாமி அவர்கள் CRI-Asst. Director எனும் பதவி வழி இவ்வாரியத்தில் ஓர் உறுப்பினராக இடம் பெற்ருல், மைய அரசின் மூலம் பெறவேண்டிய திட்ட உதவிகளைத் தக்க வகையில்பெற இயலும் என்று 'மூலிகைமணி' கருதுகின்றது. மேலும் இவ் வாரியத்தின் முன் வடிவமாகக் கடந்த ஆண்டு செயல்பட்டு வந்த 'Siddha Science Development Committee' யில் இவரை ஓர் உறுப்பினராக அரசு நியமித்து 6 மாதம் ஆகியது. அவ் ஆறு மாதமும் S.S.D.C. எவ்வித கூட்டத்தினையும் நடத்தாமையில், டாக்டர் வேலுச்சாமி அவர்கள் நியமனம் பயன் படாமலேயே போய் விட்டது. இதனை நோக்க வாரியத்தில் அவருடைய நியமனம் நியாயமாகவே இடம் பெற வேண்டியதாகின்றது.

Non-Official Members எனும் தலைப்பில் Here-ditory practitioners, Siddha Graduates என்று இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு 14 உறுப்பினர்கள் நியமனம் பெற்றுள்ளனர். கடந்த 25 ஆண்டுகளாக எந்த அரசு வந்தாலும் அவை அமைக்கும் சித்த மருத்துவக் குழுவில் இடம் பெற்றவர்களே, இவ்வாரியத்திலும் இடம்

பெற்றுள்ளனர். இவர்களில் 7 பேர் 80 வயதைக் கடந்தவர்கள். வாரியத் தலைவர் 85 ஆண்டு விழாவைக் கடந்து வருகின்றார். 4 பேர் 60 வயதைக் கடந்தவர்கள். டாக்டர் ஆனந்தகுமார் 50 வயதைக் கடந்து வருகின்றார். எஞ்சிய இரு இளைஞர்கள் மட்டுமே புதியவர்கள், அவர்களும் அரசு அலுவலர்களாதலால், 'வாயில்லாப் பூச்சியாகத்தான்' செயல்படுவார்கள். (S.S.D.C. குழுவில் முன்பு பணியாற்றிய டாக்டர் ஜெயப்பிரகாசம் அவர்கள் துணிந்து சில கருத்துக்களைக்கூற—அவரைக்குழுத்தலைவர் நீக்கி விட்டாராம்.)

ஆக இந்த வாரியம் எப்படிச்செயல்படும் என்பதைத் தற்போதைய வாரிய அமைப்பின்படி பார்க்கையில், கடந்த காலங்களில் பல அரசுகள் அமைத்த சித்த மருத்துவக் குழுக்கள் போலவேதான் செயல்படும். விஞ்ஞான அடிப்படையில் திட்டமிடும் ஆற்றல் உள்ளவர்களையோ, மக்களிடையே சித்த மருத்துவத்தைப் பல்லாண்டுகளாகப் பத்திரிக்கைகள் வாயிலாகப் பரப்பிவரும் பிரச்சார ஆற்றல் வாய்ந்தவர்களையோ,சட்டமன்றம், பாராளுமன்றம் போன்ற மக்கள் மன்றங்களில் சித்த மருத்துவ வளர்ச்சிக்குப் போராடுபவர்களையோ- இவ்வாரியத்தில் இடம்பெற வைக்காமல் அமைத்திருப்பது 'வலிமையற்ற வாரியமாகவே' தோற்றமளிக்கச் செய்கின்றது.

வாரியத்தலைவராகப் பொறுப்பேற்றிருக்கும் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் 85 ஆண்டு நிறைந்த முதியவர். தொழில் முறையாகவோ,அல்லதுஎவ்வகையிலும் மருத்துவம் பயின்றவரோ, பயிற்சி பெற்றவரோ அல்லது அனுபவம் பெற்றவர் என்று சொல்ல இயலாது. தமிழகப்புலவர் குழுவின் தலைவர்-அரசியல் செல்வாக்குடையவர் என்ற நிலையிலும், சித்த மருத்துவ அனுதாபி என்ற தகுதியிலும் இவரை-இவ்வாரியத்திற்குத் தலைவராக நியமித்துள்ளனர். சித்த மருத்துவத்திற்கு M.L.C. அளவில் வாதாடத் தக்கத் தகுதியுள்ளவர் என்பது மட்டுமே அவரைப் பற்றிய எமது கணிப்பு.

திரு. கி.ஆ.பெ. அவர்கள் இவ்வாரியத்தின் தலைவராக்கப்பட்டதில் நமக்குக் கடுமையான கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும், முதிர்ந்த தமிழறிஞர் என்பதாலும், சித்த மருத்துவம் மீது அனுதாபம் காட்டும் நற்குணத்திற்காகவும், இன்றைய முதல்வரிடம் அவருக்கிருக்கும் செல்வாக்கு காரணமாகவும், 'தலைவராக' சித்த மருத்துவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். இதுதான் உண்மைநிலை.

(உயிர்காக்கும் கலையான சித்தமருத்துவத்தினை இக்கால அறிவியல் நெறிகட்கேற்ப செம்மைப்படுத்தும் ஆற்றல் அவருக்கில்லை;

பழமையானஅவருடைய போக்குகள் (Conservative Type) முடிவுகள் காரணமாக சித்த மருத்துவ வளர்ச்சிக்கு ஏற்படும் தாமதம்;

என்போன்ற ஆராய்ச்சியாளர்களின் கருத்துக்களை அவமதிக்கும் குணம்;

தஞ்சைப் பல்கலைக் கழகக்குழு, புலவர் குழு, அரசியல் ஈடுபாடு, வேறு சில குழுக்களின் தலைமை, அன்றாடச் சொற்பொழிவுகள் போன்றவற்றில் ஈடுபட்டிருப்பதால், சித்த மருத்துவத்தின்மீது பகுதிநேர ஈடுபாட்டினைக் கூடக் காட்டமுடியாத சூழ்நிலை;

வயது காரணமாக ஏற்பட்டிருக்கும் மூப்பு;

ஆகியவற்றின் காரணமாக முழு நேரக்கவனத்தினை சித்த மருத்துவத்தின் மீது அவரால் செலுத்த முடியாது;

மேற்கண்டகாரணங்களால் 'ஜெட்' வேகத்தில் செயல்படவேண்டிய சித்த மருத்துவ வளர்ச்சி வாரியத்திற்கு அவர் பொறுத்தமானவர் அலல என்பதே 'மூலிகை மணி'யின் கருத்தாகும்.)

கடந்த மூன்றாண்டுகளாக இவர் தலைமையில் இயங்கி வந்த *Siddha Science*

Development Committee எந்த ஒரு சாதனை யும் செய்யாமல் 'சும்மா' இருந்ததுடன், செய்திருக்க வேண்டிய சில இன்றியமை யாத பணிகளைக்கூடச்செய்யாமல் சோம் பேறித்தனமாக இருந்தது. காலங்கடத்தி வந்துள்ளது. இந்நிலையை நோக்கும்போது தற்போது முதல்வர் அமைத்துள்ள 'வாரியமும்' 'அதே தலைவர்' 'அதே உறுப்பினர்கள்' என்று 'பழைய கள் புதிய மொந்தை' என்று உருமாறி வந் துள்ளதே தவிர, 'உருப்படும் அளவிற்கு உருவாக வில்லை' என்பதை வருத்தத் துடன் கூறவேண்டியுள்ளது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மற்றமுதல்வர்களை விட சித்த மருத்துவத் திற்கு விரிவான ஆக்கங்களைத் தர முன் வருகின்றார். ஆனால் அதற்கேற்ப திட்டங் களை அளிப்பதற்கு 'வாரியம்' முன்வருவது தான் தலையாய கடமை யாகும். 'வாரியம்' போன்ற அமைப்புகளின் கூட்டங்களை திட்டவரைவுக்கூட்டங் களாக நடத்த வேண்டுமே தவிர, சித்த வைத்திய சங்கங் களின் 'தீர்மானங்களைத் திணிக்கும் கூட்டமாக' நடத்துவது முறையன்று; பயனற்றதுமாகும். கி. ஆ. பெ. தலைமையில் நடக்கும் - நடந்த குழுக்கூட்டங்களில் அவர் பேசுவதுதான் மிகுதி. மற்றவர்கள் கருத்துக்களை கூறுவது கூட அரிது.

தற்போதுள்ள வாரியத்தில் டாக்டர் உத்தமராயன், டாக்டர் தியாகராசன், டாக்டர் ஆனந்தகுமார் ஆகியோர் திட்ட வரைவு அளிக்கும் திறன் வாய்ந்தவர்கள் என்றாலும் கி. ஆ. பெ. அவர்கள் முன்-பேசாமடந்தையாகி விடுகின்றனர். காரணம் அவர் கருத்துக்கு எதிர்க்கருத்துக் களைக் கூறும் வழக்கம் அவர்கட்கு ஏனோ அமையவில்லை.

இதே நிலை நீடித்தால் 'சித்த மருத்துவ வளர்ச்சி வாரியம்' Conservative type of Board ஆக காலத்தைக் கழிக்குமே தவிர, இன்றைய அறிவியல் உலகிற்கேற்ற Constructive type of Board ஆக செயல்படாது என்பதை ஓர் ஆராய்ச்சியாளன் என்ற முறையில் குறிப்பிடு கிறேன். பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக இருந்து செயல்படத்தக்கப் புதிய உறுப்பினர்களை சிலரையாவது இவ்வாரியத்தில் சேர்ப்பதன் மூலம், இவ்வாரியம் அமைக்கப் பட்டதன் நோக்கம் நிறைவேறும். இதற்கு உறுதுணையாக உதவும் கீழ்க்கண்ட உறுப்பினர்களை மாண்புமிகு முதல்வர் நியமிக்க வேண்டும்.

சட்டப்பேரவை-மேலவை சார்பாக, சித்த மருத்துவத்தில் ஆர்வமும், முழுநம்பிக்கையும் கொண்டு அதன் வளர்ச்சியில் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளவருமான திரு. வலம்புரிஜான், M.L C. அவர்களை இக்குழுவின் உறுப்பினராகச் சேர்த்தல் வேண்டும்.

பாராளுமன்றத்தில் சித்த மருத்துவ வளர்ச்சிக்கு ஆக்கம் தரும் வகையில் ஊக்கமுடன் பேசும் இ. காங்கிரஸ் உறுப்பினர் திரு. அன்பரசு அவர்களை இக்குழுவின் உறுப்பினராகச் சேர்த்தல் மைய அரசின் உதவிகளைப்பெற வாய்ப்பாக அமையும்.

கடந்த 18 ஆண்டுகளாகப் பத்திரிகைகளின் வாயிலாகவும் மூலிகைமணி எனும் சொந்த இதழ் மூலமாகவும் மக்களிடையே சித்த மருத்துவத்துக்கு வலிமையைத் தேடித் தந்து வருபவரும், சென்னைப் பல்கலைக் கழகத்தின் வாயிலாகச் சித்த மருத்துவ ஆராய்ச்சிக்காக 'டாக்டர்' பட்டம் (பிஎச்.டி.) பெற்றவருமான மூலிகைமணி ஆசிரியர் டாக்டர் க. வேங்கடேசன் அவர்களை இவ்வாரியத்தில் சேர்த்தால்

இவ்வாரியத்தின் பணிகள் புதிய எல்லைகளில் அடியெடுத்து வைக்கும். (கடந்த ஆறு மாதத்திற்கு முன் இவரை SSDC உறுப்பினராக அரசு நியமித்தது-ஆனால் SSDC ஆறு மாதமும் செயல்படாமல் தற்போது கலைக்கப்பட்ட நிலையில் இவர் பணிகள் பயன்படாமலேயே போயிற்று.)

சித்த மருத்துவ வளர்ச்சி கடந்த பத்தாண்டுகளில் பிற அறிவியல் துறைகளோடு இணைந்த ஆய்வாக மலர்ந்து வருகின்றது. Bio-Chemistry, Pharmacology, போன்ற அறிவியல் துறைகளுடன் சித்த மருத்துவத்தை இணைத்துப் பலரும் ஆராய்ந்து வருகின்றனர். இவ்வகையில், சென்னைப் பல்கலைக் கழகத்தின் உயிர் வேதியியல் துறைப் பேராசிரியை டாக்டர் இராதா சண்முக சுந்தரம் அவர்களின் பணி ஆக்கமும் ஊக்கமுமளிப்பதாக உள்ளது. எனவே அவரையும் இக்குழுவில் ஓர் உறுப்பினராகச் சேர்ப்பது-சித்த மருத்துவ அறிவியல் முன்னேற்றத்திற்கு வழிவகுப்பதாக அமையும்.

ஐந்தாவதாக, பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரி முதல்வரையும் குழுவில் ஓர் உறுப்பினராக நியமிக்க வேண்டும். சித்த மருத்துவப் படிப்பின் முன்னேற்றங்கள், விரிவாக்கங்கள், மாணவர் பிரச்னைகள் பற்றி விவாதிக்கத் தக்க வகையில் இவருடைய நியமனமும் இன்றியமையாத தாகின்றது.

இவர்களின் நியமனத்தின் மூலம் இவ்வாரியத்தினை 'செறி வூட்டப்பட்ட வாரியமாக' மாற்றியமைக்குமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களை 'மூலிகைமணி' சார்பிலும், சித்த மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் சார்பிலும் கேட்டுக்கொள்கின்றேன்.

சித்த மருத்துவ அறிவியல் ஆராய்ச்சி'
'சித்த மருத்துவக் கலைக்கூடம்'
'சித்த மருத்துவ இலக்கிய ஆராய்ச்சி'
'சித்த மருத்துவப் பல்கலைக்கழகம்'

என்று பல்வேறு 'திட்ட வரைவுகளை' அளிகக சித்த மருத்துவ வளர்ச்சி வாரியம் முன்வர வேண்டும். அதற்கேற்ப செயல் படும் வகையில் மேற்குறிப்பிட்ட ஆறு உறுப்பினர்களையும் உடனடியாக நியமிக்க வேண்டுகிறேன்.

க. வேங்கடேசன்
7—11—83.

நோயும் மருந்தும்

பார்த்தீனியத்தின் விஷம் கண்டு பயப்பட வேண்டாம்!

'மூலிகை மணி' தரும் மூலிகைச் சிகிச்சைகள்!

அண்மையில் 'ஜூனியர் விகடன்' வார இதழில் 'பார்த்தீனியம்' எனும் விஷச்செடிபற்றியவிரிவான விஞ்ஞான விளக்கங்களைபாமரரும் படித்துப்பயன் பெறுமளவுக்கு வண்ணப்பட விளக்கங்களுடன் விளக்கியிருந்தனர். மக்களின் நல வாழ்வில் அக்கறை கொண்டு அற்புதமானதொரு சேவையை இதன்மூலம் 'ஜூனியர் விகடன்' ஆற்றியுள்ளது. மக்களின் நலவாழ்வைச் சீர்குலைக்கும் விஷச்செடியினைப் பற்றிய எல்லா விவரங்களையும் சிரத்தையுடன் தொடர் கட்டுரையாக வெளியிட்ட 'ஜூனியர் விகடன்' இதழ், பெயரில் தான் ஜூனியரே! தவிர, மக்கள் பணியில் 'சூப்பர் சீனியர்' என்றால் மிகையல்ல. 'மூலிகை மணி' வாசகர்கள் சார்பில் 'ஜூனியர் விகடனுக்கு' நமது பாராட்டுகள்.

'ஜூனியர் விகடனில்' பார்த்தீனியம் பற்றிப் படித்தறிந்த வாசகர்களில் ஒருவர் 'மூலிகை மணிக்கு' கீழ்க்கண்ட கடிதத்தினை அனுப்பியுள்ளார்.

ஐயா,

பார்த்தீனியம் செடியால் பாதிக்கப்பட்டால் வாழ்நாள் முழுவதும் அந்தத் தோல் வியாதி இருக்குமாமே! அதைக் குணப்படுத்த மருந்து இருந்தால் 'ஜூனியர் விகடன்' பத்திரிக்கையில் ஆங்கில டாக்டர்களின் கூற்றை மறுத்துக் கட்டுரை எழுதுமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்,

K. மோகன், No. 2, பின்னிரோட், சென்னை-2

இவ்அன்பரின் வேண்டுகோளுக்கிணங்க 'பார்த்தீனியம் விஷத்தால்' பாதிக்கப்பட்ட தோல்நோய்க்குக் கீழ்கண்ட சித்த மருந்து முறைகளைக் குறிப்பிடுகின்றேன். இவை நிச்சயம் பலன் தரத்தக்கவை. என்னிடம் நேரில் வந்தும் சிகிச்சை பெறலாம் சென்னை அரும்பாக்கத்தில் டாக்டர் வேலுச்சாமியின் மேற்பார்வையில் இயங்கும் 'சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையத்தில்' இத்தகு தோல் நோய்கட்கு சிறப்பான சித்த மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகின்றது. அங்கும் தங்கி சிகிச்சை பெறலாம். எனவே ஆங்கில மருத்துவர்களின் கூற்றை எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ளவும், வீண் பீதியடைய வேண்டாம். வாழ்நாள் முழுதும் சிகிச்சை பெறத் தேவையில்லை. தரமான சித்த மருந்துகளால் விரைவில் நிரந்தர குணம் காணலாம்.

பார்த்தீனியம் விஷச்செடியின் நஞ்சு பற்றிப் பல ஆங்கில மருத்துவர்கள் ஆதாரபூர்வமாகப் பல தகவல்களைத் தந்து விட்டு இதற்கு வாழ்நாள் முழுவதும் சிகிச்சை பெற வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளனர். இதனைப்படித்த போது அண்மையில் சென்னையில் நான் பார்த்து வியந்த 'The Cassando Crossing' எனும் ஆங்கிலப் படம் பார்த்த உணர்வை அடைந்தேன். அதிலும் இப்படித்தான் விஷக்கிருமியால் பாதிக்கப்பட்ட ஒருவனுல் ஒரு புகைவண்டியின் பயணிகள் சர்மநோயால் பாதிக்கப்பட்டு-சிலர் இறக்க, பலர் பரிதவிக்க—டாக்டர்கள், விஞ்ஞானிகள் பதைபதைப்புடன் மேலும் இது நாட்டில் பரவாமல் இருக்க—நாட்டுக்கு ஒதுக்குப்புறமாக ஒரு உளுத்துப்போன பாலத்தில் புகைவண்டியை செலுத்தி விடுகிருர்கள். புகைவண்டியில் பயணம்செய்த ஒரு டாக்டர் தம்பதியினர் அரும்பாடுபட்டு பலரை பாதிப்பிலிருந்து காப்பாற்றி விட்டு இனிமேல் ஆபத்தில்லை, புகைவண்டியை நிறுத்தி விட்டு மேற்கொண்டு மருத்துவ சிகிச்சை தரலாம் என்று கருத்துரைக்க—ஆனுல் இராணுவ விதிகளுக்குட்பட்ட சிப்பாய்கள் டாக்டரின் வேண்டுகோளினைப் புறக்கணித்து இரயிலை பாலத்தின்மீது செலுத்தி விடுகின்றனர். இடையில் டாக்டர் சில பயணிகளின் துணையுடன் சில பயணிகளை இரண்டு, மூன்று தொடர் பெட்டிகளில் ஒதுக்கி அதனை மிகவும் சிரமப்பட்டு, வேகமாக சென்று கொண்டிருக்கும் வண்டித்தொடரிலிருந்து பிரித்து விடுகின்றனர். இவர்கள் இருந்த இரண்டு பெட்டிகள் தவிர்த்து மற்றவை அனைத்தும் உளுத்துப்போன பாலத்தில் சிக்கி, தகர்ந்து ஆற்றில் விழுந்து விடுகின்றன.

இதற்கிடையில் குறிப்பிட்ட விஷக்கிருமியால் பாதிக்கப்பட்ட 'நாய்' ஒன்றுக்குச் சோதனைச்சாலையில் சிகிச்சை அளித்து—தக்க

முறிப்பினைக் கண்டறிந்த ('எல்லாரும் இதற்கு முறிப்பு இல்லை அதோ கதி தான்' என்று கைவிட்ட நிலையில் ஒரு பெண் விஞ்ஞானி விரைவாகப் பணியாற்றி, 'ஆக்ஸிஜனை' அபரிமிதமாக அளித்தால்- நோய் கட்டுப்பட்டு குணமாகிறது என்ற உண்மையை விஷக்கிருமியால் பாதிக்கப்பட்ட நாய்க்கு அளித்து அது குணமடைவதிலிருந்து அறிந்து அறிவிக்கின்றாள்,) பெண் விஞ்ஞானியின் சேவை பயணிகளுக்குச்சமயத்தில் கிடைக்க முடியாமல் போய்விடுவது படத்தின் சோகமான கட்டமாகும்.

இப்படத்தினைப் பார்த்த அன்று மாலை தான் 'ஜூனியர் விகடனில்' பார்த்தீனியம் பற்றிய கட்டுரையைப் படித்தேன். படத்தில் 'விஷக்கிருமி'—பத்திரிக்கையில் 'விஷச்செடி.' அங்கும் விஷக்கிருமியால் அலர்ஜி, சர்மத்தில் கொப்புளம், முடிவில் மூச்சு முட்டி மரணம் இங்கும் பார்த்தீனியத்தால் அலர்ஜி, சர்மத்தில் கொப்புளம், பேய்ச்சொறி, மூளைக்குழப்பம்—முடிவில் மரணம்.

படத்தில் வரும் டாக்டர்கள் 'இதற்கு மாற்று மருந்தில்லை' என்று கைவிடுகின்றனர். இங்கும் பார்த்தீனிய விஷத்தால் 'வாழ் நாள் முழுவதும் சிகிச்சை' என்று ஆங்கில மருத்துவர்கள் கை விரிக்கின்றனர் ஆனால் படத்தின் முடிவில் வரும் பெண் விஞ்ஞானியின் கண்டுபிடிப்பால் இறுதியில் விஷக்கிருமிக்கு மாற்று மருந்து கண்டு பிடிக்கப்படுகின்றது.

இங்கும் சித்த மருத்துவத்தால் பார்த்தீனிய விஷத்திற்கு முறிப்பு கிட்டப்போகின்றது

'The Cassando Crossing' படம் நிழல்
'பார்த்தீனிய விஷத்திற்கு சித்த மருந்து முறிப்பு'
நிஜம், ஆம்! நிழல் நிஜமாகின்றது!

பார்த்தீனியம் விஷம்—சித்த மருத்துவ நூற்களின் கருத்துப்படி கடுமையான தாவர நஞ்சாகும். சித்தர்கள் பல்வேறு வகையான நஞ்சுகளுக்கும் பல குறிப்புகளைச் செய்முறைகளுடன் கூறியுள்ளனர். அவர்களின் கூற்றுப்படி சுக்கு, கடுக்காய், மிளகு முதல் எட்டிக் கொட்டை சேராங்கொட்டை ஆகியன வரை எல்லாவற்றுக்கும் நஞ்சுத்தன்மை உண்டென்றும், அவற்றை முறிக்க பின்னரே மருந்தாகச் செய்யவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளனர். 'நஞ்சு நூல்' என்றொரு தனி நூல் தாவர நஞ்சுகளைப்பற்றியும்-அவற்றை முறிக்கும் மருந்துப்பொருட்களைப் பற்றியும் விளக்கும் நூலாக சித்த மருத்துவத்தில் இன்றும் உள்ளது.

'சுக்குக்குப் புறணி நஞ்சு
கடுக்காய்க்கு அகணி நஞ்சு'

என்பது நாட்டுப்புறப் பழமொழி, சேராங்கொட்டையின் பால் சர்மத்தின் மீது பட்டால் உடம்பு முழுவதும் அரிப்பெடுத்து வீங்கி விடும். இதனை முறிக்க, தேக்கின் இலையை அரைத்துப் பூசலாம். புளியிலையை கஷாயமாக்கிப் பருகலாம். அல்லது தேங்காய்ப்பால் பருகலாம். இவ்வாறு நூற்றுக்கணக்கான தாவரங்களின் நஞ்சுத் தன்மையையும் அவற்றின் பாதிப்பால் உடம்பில் ஏற்படும் கோளாறுகளையும்-அதனைப்போக்கும் நஞ்சு முறிப்புகளைப் பற்றியும் சித்த மருத்துவ நூற்களில் பரவலாகக் காணலாம்.

இனி அனுபவரீதியாக பார்த்தீனிய விஷத்தினை முறிக்கும் மருந்தினையும்—அதன் பாதிப்பால் ஏற்படும் சர்மநோயைப் போக்கும் வழிமுறைகளையும் காணலாம் :—

பல்வேறு நஞ்சுகளை முறிக்கும் ஆற்றல் அருகம்புல், மிளகு ஆகியவற்றுக்கு உண்டு. எனவே, அரைப்பிடி அருகம்புல் எடுத்து அத்துடன் 10 மிளகு ('பத்து மிளகிருந்தால் பகைவர் வீட்டிலும் உண்ணலாம்' என்பது பழமொழி) 2 சிட்டிகை சீரகம் இவற்றை நன்கு அரைத்து அதனை எடுத்து காலை வெறும் வயிற்றில் வாயிலிட்டு பசுமோர் சிறிது பருகலாம். இதனைத்தொடர்ந்து 20 நாட்கள் செய்யலாம். (அமரர் கண்ணப்பரின் வெற்றிகரமான சிகிச்சை இது)

வல்லாரை இலை, சிறுசின்னி இலை ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை கஷாயம் செய்து பால் விட்டுப்பருக வேண்டும். இவை கிடைக்கவில்லையெனில் – துளசி இலை 10 எடுத்து மென்று விழுங்கலாம்.

தும்பைப் பூவின் சாற்றினை 5 துளி பாலில் பருகலாம். பூ கிடைக்காவிடில் இலைச்சாற்றினை 10 துளி தரவும். தும்பை இலையை மஞ்சள் சேர்த்து அரைத்து 'பேய்ச்சொறி' வரும்போதும் பூசி வர அவை தணியும். (பார்த்தீனிய விஷத்தினால் வரும் சர்மநோய்க்கு தும்பை நன்கு பயனாகிறது என்று டாக்டர் தம்பைய்யா அவர்கள் சில ஆண்டுகட்கு முன்னர் குறிப்பிட்டுள்ளார்.)

சீமை அகத்தி(அ)வண்டுக்கொல்லி என்றொரு மூலிகை இதன் இலையையும் அரைத்து சர்மத்தின்மீது பூசிவர கொப்புளங்கள் மறையும்.

கருஞ்செம்பை, கடுக்காய், பறங்கிப்பட்டை, சிவனார் வேம்பு, கருஞ்சீரகம், நீரடிமுத்து, வசம்பு, குப்பைமேனி, கலியாண முருக்கன் பூவரசு இலை—காய், பெருங்காயம், நன்னாரி, சந்தனம், மருதாணி,

இலுப்பை, நெல்லி, சிறுக்கீரை, அகத்தி, அவுரி, நஞ்சறுப்பான் போன்ற மூலிகைகளும், 'பார்த்தீனியத்தின்' விஷத்தன்மையைப் போக்க வல்லவையாகக்கருதி மேலும் ஆராயலாம்.

என் அனுபவத்தில் இதுபோன்ற தாவர நஞ்சுகளையும் அதனால் வரும் பாதிப்புகளையும் போக்க—ஓமியோபதியில்

Echinacea Angustifolia எனும் மருந்தின் தாய் திரவத்தினை வாங்கி காலை, பகல், இரவு மூன்று வேளை 5 முதல் 10 சொட்டு எடுத்து 1 அவுன்ஸ் சுத்தமான தண்ணீரில் பருகி வரலாம். 10 முதல் 20 நாட்கள் நோய்க்கேற்ப பயன்படுத்தலாம்.

அடுத்து Silicia 30 எனும் திரவ மருந்தினையும் இவ்வாறே காலை, பகல், இரவு—மூன்று வேளை 1 அவுன்ஸ் சுத்தமான தண்ணீரில் பருகி வர வேண்டும்.

சர்ம நோய் தீவிரமாகி, நமைச்சல், சொறி அதிகமாகி விட்டால் சித்த மருத்துவமனையில் சேர்வதோ அல்லது என்னிடம்நேரில் வந்து சிகிச்சையோ பெறலாம்.

பார்த்தீனியம் போன்ற தாவர நஞ்சால் பாதிக்கப்பட்டவர்கள் மாமிச உணவைத் தவிர்க்கவும். பால், மோர், வெண்ணை, நெய், கீரைகள் நிறைய சேர்க்கலாம்.

சிறுகீரை, அகத்திக்கீரை, வாரம் 1 நாள் சாப்பிடலாம்.

கத்திரிக்காய், பீன்ஸ், கொத்தவரை, புகையிலை, காபி, டீ, மது ஆகியன அறவே தவிர்க்கவும்.

இரவில் அதிகநேரம் கண்விழிப்பு, நைலான், ரப்பர் போன்ற அணிகலன் ஆடைகளைத் தவிர்க்கவும்,

டாக்டர் தம்பையா போன்றவர்கள் இதற்கு சித்த மருந்துகளைப்பயன்படுத்தி அவற்றின் விஞ்ஞான பூர்வ விளக்கத்தினை அளிப்பதற்கு முன்வர வேண்டுமே யொழிய

'வாழ்நாள் முழுவதும் சிகிச்சை'

என்று அவநம்பிக்கையான ஆங்கில மருத்துவ சிகிச்சையைப் பற்றியே பிரசாரம் செய்து கொண்டிருக்க வேண்டாம். நல்ல மருந்துகள் எங்கிருந்தாலும் யார் சொன்னாலும் அவற்றை மக்கள் நலம் கருதிப் பயன்படுத்திப் பரப்புதல் நல்ல மருத்துவர்க்குரிய தலையாய கடமை.

பார்த்தீனியத்தின் விஷ முறிப்புக்கு சித்த மருந்துகள் நன்கு பயனளிக்கும். அஞ்சவேண்டாம். — க.வே.

ஓலைச் சுவடிகளிலிருந்து

(மருந்துவர்களின் ஆய்வுக்கு மட்டும் உரியது)

சு. வேங்கடேசன்.

இரத்தக் கடுப்பு, சீதம், மூலரத்தம், அதிசாரபேதி ஆகியன குணமாக

சாதிக்காய் சாதிபத்திரி மாசிக்காய் கிராம்பு
கோஷ்டம் அதிவிடையம் லவங்கப்பட்டை விளாம்பிசின்

இவற்றை சரியளவு எடுத்து அரைத்து மாதுளம் காயினுள்ளே வைத்து வெண்சீலை பொதிந்து சுற்றி அதன்பேரில் சாணத்தையப்பி காட்டுப் [illegible] அளவு புடம்போட்டு காய் வேகாமல், சாணத்தில் அக்கினி பற்றியவுடனே, காயிலே வேகும்போது தீயைப் பின்னுக்கு தள்ளி, கசத்தை நீக்கி, கல்வத்திலிட்டு மாதுளைப்பழச்சாறு விட்டு அரைத்து சிறு சுண்டைக்காயளவு உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

காலை, மாலை, இரவு - மூன்று வேளை ஒரு மாத்திரை வீதம் மோரில் சாப்பிட இரத்தக்கடுப்பு, சீதம், மூல நோயால் வரும் ரத்தம் ஆகியன நீங்கும். 3 முதல் 6 நாட்கள் சாப்பிடலாம்.

தேனில் குழைத்து உண்ண அதிசார பேதி நீங்கும். உப்பு, புளி, காரம், மாமிசம், புகை, மது ஆகியன நீக்கவும்.

திரிகடுகு லேகியம்

சுக்கு மிளகு, திப்பிலி, சீரகம் இவை 100 கிராம்.

ஏலம், கிராம்பு இவை வகைக்கு 10 கிராம் - சுத்தி செய்து சூரணித்து அதனை பனைவெல்லப் பாகில் கலந்து பக்குவத்தில் இறக்கியவுடன் நெய் 100 மில்லியும், தேன் 50 மில்லியும் கலந்து கிளறி வைத்துக் கொள்க.

வாத வாய்வு, உட்சூடு, பித்த வாய்வு, வயிற்றுவலி கடுப்பு, எரிச்சல், அக்கினி மந்தம், வாந்தி, எலும்பைப் பற்றிய காய்ச்சல், வயிறு பொருமல் ஆகியவற்றுக்கு-மேற்படி லேகியத்தை காலை மாலை இருவேளை சுண்டையளவு எடுத்து சுவைத்து உண்டு வர 10 நாளில் இவை தீரும்.

—தொடரும்

நம்நாட்டு மூலிகைகள்



249-வது மூலிகை - பறங்கிப்பட்டை

டாக்டர் க, வே.

சித்த மருத்துவத்தின் ஆணிவேர் - மூலிகைகளின் மூலமாகத் தான் வேரூன்றியுள்ளது. அதனுல்தான் சித்தர்கள் மருந்து பற்றி பேசும்போது

'வேர் பாரு, தழை பாரு....' என்று அடியெடுத்து வழிகாட்டு கின்றனர். இயற்கை அன்னையின் மடியில் வளரும் வளமான மூலிகைகளே நலமான வாழ்வைத் தரும் என்பதைச் சித்தர்கள் அனுபவ ரீதியாக ஆராய்ந்தறிந்து மக்கள் நல்வாழ்வுக்காக - பல்லா யிரக்கணக்கான பாடல்களில் தெளிவாகக் கூறியுள்ளனர். நாம்தான் கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய் காலில் மிதிபடும் செடி கொடிகளைப் பற்றி அறியும் ஆற்றலின்றி வீணே ஆங்கில மருந்துகட்கு அடிமையாகி வருகிறோம்.

ஆதாரக் கல்வியில்—மூலிகைகளைப் பற்றிய அறிவை மக்கள் இடையே அரசு பரப்பினுல் எதிர்காலத்திலாவது நம் நாட்டு மூலிகை களின் பயன் மக்களிடையே நலவாழ்வை வாரிவழங்கும், நல்லோர் சிந்தனைக்கும்-அரசாட்சி செய்வோர் செயல்பாட்டுக்கும் இக்கருத்தினை விடுத்து இக்கட்டுரையின் 'நாயகன்' 'பறங்கிப் பட்டை'யைப் பற்றி ஆராய்வோம்,

'பறங்கி' என்றுலே நமக்கு அந்நியப்பட்டது என்று பொருள். ஆம்; பறங்கிப்பட்டை வெளிநாட்டிலிருந்து நம்நாட்டுக்கு நலம் தர வந்த நன்மகள். சீனு, ஜப்பான் நாடுகளிலிருந்து பலநூறு ஆண்டு கட்குமுன்னரே தமிழகம் வந்து - தேரையர் போன்ற சித்த மருத்துவர் கள் சிந்தையிலும் குடிபுகுந்துள்ள சிறப்பு இதற்குண்டு, நாட்டு மருந்துக் கடைகளில் சர்வசாதாரணமாகக் கிடைக்கக் கூடியது.

இனிப்புச் சுவையை உடைய இது - உடலுக்கு குளிர்ச்சியைத் தரவல்லது. அமுக்கினுங் கிழங்குக்கு - தங்கை போன்றது பறங்கிப் பட்டை.

இரத்தத்தைத் தூய்மை செய்யும்
மேகப் பிணியை நீக்கும்
ஆண்மைச் சக்தியைப் பெருக்கும்
சொறி, சிரங்குப் புண்களைப் போக்கும் அரிய மருத்துவக் குணங்களைக் கொண்டதாகும்.

செய்முறைகள் : பறங்கிப்பட்டைச் சூரணம் :- 250 கிராம் பறங்கிப்பட்டையை வாங்கி பாலில் பிட்டவியலாக வேகவைத்து நிழலில் உலர்த்திப் பின் கருந்துளசிச் சாற்றில் ஊறவைக்கவும், நிழலுலர்த்தலாக உலர்த்திப் பின் பொடித்துச் சலித்து வைத்துக் கொண்டு 100 கிராம் சர்க்கரை சேர்த்துப் பத்திரப் படுத்தவும்.

பயன் :-எல்லாவித சர்ம நோய்க்கும் இதனை காலை, மாலை இருவேளை 1 கிராம் அளவு வாயிலிட்டுச் சிறிது பால் அருந்திவர 20 முதல் 40 நாட்களில் சர்ம நோய் தணியும்.

பறங்கிப் பட்டைக் கஷாயம்:- இதனை ஒன்றிரண்டாக இடித்து கைப்பிடி அளவு எடுத்து 3 குவளை நீர்விட்டுக் கஷாயமாகக் காய்ச்சி பாதியளவாகச் சுருக்கி-அதில் 10 மிளகு தட்டிப்போட்டு வடிகட்டிப் பருகிவர நீரிழிவு, வெட்டைச்சூடு, நீர்வேட்கை ஆகியன கட்டுப் படும்.

சித்த மருத்துவர்கள் பறங்கிச் சக்கையின் மூலமாகக் கொண்டு 40 விதமான கடைச் சரக்குகளைச் சேர்த்து 'பறங்கி ரசாயனம்' என்றொரு மருந்தைச் செய்வார்கள். இதனைத் தொடர்ந்து பயன் படுத்திவர மேகக்கிரந்தி, கொருக்கு நோய், லிங்கப்புற்று ஆகியன தீரும்.

பறங்கிப்பட்டை லேகியம் :-பறங்கிப்பட்டை 200 கிராம், ஓமம், அதிவிடயம், குரோசானி ஓமம், சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, சுக்கு, மிளகு, திரிபலை இவை வகைக்கு 15 கிராம் எடுத்துப் பொடி செய்து பசும்பால் விட்டு கலந்து பிசைந்து நெய் 200 மில்லி விட்டு கிளறி அடுப்பிலேற்றி சிறு தீயில் வேகவைக்கவும். மெழுகு பதம் வந்ததும் 200 கிராம் சர்க்கரை சேர்த்துக் கிளறி 3 நாள் அப்படியே வைக்கவும். பிறகு அதனை எடுத்து கண்ணாடிப் புட்டியில் பத்திரப் படுத்தவும்.

வெண்மேகம், கருமேகம், கரப்பான், சொறி, சிறங்கு, வெட்டை கொருக்கு நோய், அதிசார சேதி-ஆகியவற்றால் அவதிப்படுவோர் மேற்கண்ட லேகியத்தை காலை, மாலை நெல்லிக்காய் அளவு வாயில் இட்டுப் பால் சிறிது பருகி வரவும். 40 நாட்கள் இவ்விதம் செய்து வர மேற்கண்ட நோயிலிருந்து குணம் பெறலாம்.

சர்மத்தின் பாதுகாப்புக்கு - பறங்கிப்பட்டை நன் மருந்தாகிறது என்பது அனுபவ உண்மை !

விஷஜந்துக்களும் மூலிகைகளும்

(பாம்பு)

—அமரர் மூலிகைமணி கண்ணப்பர்

பெருவிரியன் கடிக்குறி குணமும் மருந்தும்

பூச்சப்பா பெருவிரியன் வயிற துளையும்
பொருவச்சுத் தட்டினது போற் பறக்கும்
பூச்சப்பா கோவையிலை மிளகுஞ் சேர்த்துப்
புத்துச்சோ றெண்ணெ யதுபுகட்ட வேண்டும்
நீச்சப்பா சுந்தரியின் தயிலந் தொட்டு
நீதடவி வெற்றிலையிற் கொடுத்துப் போடு
ஏச்சிவிடும் விரியனென்ற சாதி யப்பா
எந்தவிட மானாலுங் குணத்தைக் கேளாய்

பொருள்: பெருவிரியன் கடிக்குறி குணங்களாவன:- வயிறு லவித்தலும், அச்சைத் தட்டினால் எப்படி வெகுதூரஞ் சென்று ஒலி கேட்குமோ அவ்வாறு உடலில் வெகுதூரம் வரைக்கும் உடல் முழுவதும் அந்த நஞ்சு பரவும். இந்த விடத்திற்குக் கோவையிலை, மிளகு புத்துச்சோறு இவற்றை விதிப்படிக் கலந்து எண்ணெய் காய்ச்சி அதை நோயளவுக்குத் தக்கபடி மருந்தளவு, நாள் அளவு, கண்டு உணர்ந்து கொடுக்கவேண்டும். அதுவுமல்லாமல் சுந்தரியின் தையிலத்தை வேண்டிய அளவு வெற்றிலையில் தடவிக் கொடுக்க வேண்டும்: இவ்வாறு கொடுத்தால் இப்பெரு விரியன் விடம் நீங்குவதோடல்லாமல் எவ்வகை விரியன்கடி நஞ்சுகளும் தீரும்,

இரத்த விரியன் கடிக்குறிக்குணமும் மருந்தும்

தினப்பா இரத்தவிரியன் கடித்த தென்றால்
தேகத்து குருதியெல்லாம் மயிர்க் காலோடும்
கண்ணப்பா தெரியாது காது மில்லை
கனமாக ரத்தம்வரும் வாய்மூக் காலே
தின்னப்பா புத்தின்சோ றெள்ளி னெண்ணெய்
சேரவே சமன்காய்ச்சி யுட்க ருந்தி
இன்னமதைக் கடிவாயிற் பூசிக் கட்டி
இதமாக கோவைநீர் துவாலை பூசே

பொருள்: இரத்த விரியன் கடிப்பதனுல் உண்டாகும் குறிக் குணங்களாவன: உடம்பிலுள்ள இரத்தமெல்லாம் மயிர்க்கால்கள் தோறும் வெளிப்படல், கண் தெரியாமை, காது கேளாமை, வாய் வழி யாகவும்; மூக்கு வழியாகவும் இரத்தம் வெளிப்படுதல் என்னும் இவைகளாம்.

உழையுங் கடிவாயுதிரமதா யொழுகி யோடு நாவுலரும்
அழையும் வயிறு கழியாதே யகமே தாக மனல்மீறிக்
குழையுந் தலையு முயிர்குறையும் கொண்டால் மருந்து குமட்டி டலும்
நுழையு மிரத்த விரியனென நுண்மையறிந்து நுவல்வீரே.

பொருள்: இரத்த விரியன் கடியின் குறிக்குணங்களாவன: கடிவாயில் இரத்தங்கசிறல், நாவுலர்தல், வயிறு கழியாமை, நீர் வேட்கை, உடல் மிகக்காய்தல், தலைநடுங்கல், உயிர்வன்மை குறைதல் மருந்துண்டால் குமட்டல் என்னும் இவைகளாம்.

புத்தான் சோறெண்ணெய்

புத்தான் சோறும் எண்ணெயும் சரியளவாய்ச் சேர்த்துப் பக்கு வமாகக் காய்ச்சி வழக்கத்திற்கண்ட அளவில் உள்ளுக்கு கொடுத்து அதையே கடிவாயிற் பூசிக்கட்ட வேண்டும். இதுவல்லாமலும் கோவைச் சாற்றையும் பூசவேண்டும். அப்படிப் பூசினுல் மேற்படி இரத்த விரியன் கடிவிடம் தீரும்.

வௌவால் விரியன் கடிக்குறி குணமும் மருந்தும்

உண்ணப்பா வெடவாலின் விரிய ஞனல்
உடன்பற்க ளாக்கிட்டி யுடல்மு யக்கும்
புண்ணுகுந் தேகங்கை கால்கு றையும்
புதுச்சொறியாம் வெங்குட்ட முது மேனி
நன்ருகச் சங்கம்வேர் வெந்நீர் தன்னில்
நாற்பதுநா ளிருநேரம் பலமே யுண்ண
பின்னையுங்கால் மண்டவமே பங்கம் பானா
பிசகாம லிருநேரங் கழஞ்சு தின்னே

பொருள்: வெள்வால் விரியன் கடித்த குறிகுணங்களாவன: அது கடித்தவுடனே பல் கிட்டிப்போதல், மயக்கத்தோடிருத்தல், உடல் முழுவதும் புண்ணுதல், கை குறைதல், கால் குறைதல், உடலில் புதிய புதிதாகச் சொறியுண்டாதல், குட்ட நோய்போல் உடல தடிப்பாய் ஊதல் இவைகளாம்.

மருந்து

சங்கம் வேர்ப்பட்டையை கவந்நீர் விட்டரைத்து வேளைக்கு ஒரு பலமாக இருவேளை (40 நாள்) உண்ண வேண்டும். அதன் பின்னர் ஆடு தின்னாப்பாளையை அரைத்து வேளைக்கு வராகனெடை அளவாக இரண்டு வேளையும் கால் மண்டலம் உண்ணவேண்டும். அப்படிக் கொள்ளுவதால் வெள்வால் விரியன் கடித்த விடந்தீரும்.

பதினாறு விரியன் கடிகளுக்குப் பொது மருந்து

விரியன்குலப் பதினாறின் விடத்துக் கெல்லாம்
விளம்புகிறே னவிழ்தத்தின் விவரங் கேளாய்
பெருவாகைப் பட்டைச்சா றுழக்க தாகும்
பின்னையதி லாவினெய் பாதி சேர்த்தே
ஒருபலந்தான் மிளகுத்தூள் கூடப் போட்டே
உள்ளுக்கீ தவிழ்தமாய்க் கொடுத்துப் போடு
உரியசிற்று முட்டியிலை நசிய மிட்டே
உடல்முழுதும் பூசிவிட மோடிப் போச்சே.

பொருள்: விரியன் வகைப் பதினாறுக்கும் கொடுத்ததற்குரிய பொது மருந்துகளின் விபரத்தைக் கேட்பாயாக. பெருவாகைப் பட்டைச்சாறு உழக்கு, பசு நெய் ஆழாக்கு, இவையிரண்டையும் சேர்த்து அதில் 1 பலம் மிளகுத்தூள் போட்டு நோய் அளவுக்கும், உடல் வன்மைக்கும் தக்கபடி காலளவு மருந்தளவு கண்டு கொடுத்தால் மேற்படி நஞ்சுகள் தீரும். இதுவுமல்லாமல் சிற்றுமுட்டி இலையை நசுக்கி மூக்கில் நசியமிட்டு உடல் முழுவதும் துவாலைபூச நஞ்சுயிர்களால் உண்டான விடங்கள் தீரும். — (தொடரும்)

சென்ற மாதத் தொடர்ச்சி

'சிவயநம'

—ஸ்ரீ. மெய்யப்ப சுவாமி அவர்கள்

காலானப் பன்னிரெண்டில் நாலேவிந்து
காலெட்டுங் காயத்திற் சூக்ஷமூலம் என்கிறார்

இன்னும் நந்தீஸர் நிகண்டு 300-ல். 252-வது பாடலில்

இருகாலெனிலோ எட்டரைகாணி
ஒருகால் முக்காலொன்பது காணி
அறுகால் நான்மா ஆடுமாயெட்டில்
சருகாமலதைச் சாறக்காணே என்றும்

253-வது பாடலில் காணி என்பது கண்டறிலெக்கம்.....என்கிறார் எட்டின் பாதி 4 எனவே, 8-ம் 4—12 சூரியகலைகள் ஒன்று கால், முக்கால் ஆக இரண்டு 8 (எட்டு) 2-ம்—10 கலைகளும் 3ஆம் பிறை சந்திரன், சூரியன் கலைகள் 12-ல் 4 கலைகள் பிரியாதிருந்தால் (ஓடிக்காது) வாயுவுக்கலைகள் வளரமுடியாது. சிகாரம் தீயும், வகாரம் வாயுவு வஸ்துக்கள் கூடினால் ஞான ஒளியானயகார அக்கினி பிறக்கும். இதற்குச் சுழிமுனை எனப்பெயர்....வகார வாயுவு வஸ்த்தும் 'உகார அப்பு வஸ்த்தும் கூடினால் மகாரமென்றமாய் கை இருளான சுழினை எனும் பஞ்சபூத பிண்டம் (கரு. சிசு) பிறக்கும் (சுழிமுனை வேறு சுழினைவேறு) இதற்குசான்று ராமதேவர் சிவயோகம் 200-ல்

பண்டான வகாரமடா விந்துவிந்து
பதிவான உகாரமடா சத்திசத்தி
நின்றாடும் மகாரமடா சுழினைக்கம்பம்
நேர்மையுடனிது மூன்றுந் தேகமாமே என்கிறார்

இந்த முப்புக் கட்டுரைகள் ஆரம்பமுதல் (முதல்பாகம்) கடைசிக் கட்டுரைவரை 'சிவ' எனும் இரண்டக்ஷரங்களின் உண்மையான சித்தர்களின் ரகஸிய பொக்கிஷத்தின் சிறு விளக்கமாகும். சி. வ. எனும் இரண்டக்ஷரங்களின் கூட்டில் (இணைந்து பிறந்த 'ய' எனும் அக்ஷரத்தின் அக்கினி பிறப்பைத்தான் கூறியுள்ளேன் (ரவி. மதி, அக்கினி, தாய், தந்தை, பிள்ளை) கோரக்கர் நம நாஸத்திறவுகோல் 100-ல் ஆதிநீர் வளப்பமுங்குட நீருதிப்பும் எனுந்தலைப்பில்

தாய்தந்தை பிள்ளையுடன் மூன்றுமொன்றதாச்சு
தட்டழியாச்சிப் பிக்குடதீர் சிறுநீருமைபாச்சு
ஆய்திறந்து கொண்டிடுவாயன்னை கொங்கைப்பாச்சு
அம்மட்டிலுமிம் மட்டிலுமாகும் பெண்ணுஞ்சாக்ஷி

ஆகவே 'ய' எனும் அக்கினி எனும் வஸ்த்துவின் (கல்பம்) குணம், வீரியம், செயல் செயல்படுத்தும் முறைகள் வழிமுறை தவராது உட்கொள்வது வேறு விதங்களில் செய்படுத்தல். அதனுல் ஏற்படும் உபாதைகள் மருந்துகள் செய்முறைகள் யாவும் பின்வரும் கட்டுரைகளில் கூறுகிறேன். சிவயநம எனும் வஸ்த்துவிற்கு பூரணம் என்றுதான் பெயர். ஆனுல் கலைகள் 1தோன். பூரணம், 16 அல்ல தவிர பூரணம் நான்குதான் விபரம் பின்பு மச்சமுனி நிகண்டு 106-ல் தீக்ஷையில் மறைத்த விபரம் எனுந்தலைப்பில் 57-வது பாடல் கடைசி வரியில்...... ஒள்ளிய சந்திரனுல் பூரணத்திலே

பூரணம் நாலுக்கும் பூட்டினுர் பூட்டை
காரணம் சித்தர்கள்காண்பார் மற்ருேர்காணுர்....என்கிருர்

இவ்வித வழிமுறைகளான தீக்ஷையன் ரகசியங்களைத்தான் சித்தர்கள் பூரணப் பொக்கிஷமெனக் கூறப்படுவது இவ்வஸ்துக் கேவலமாகவும், அருசையாகவுங்கருதி ஒதுக்கித் தள்ளப்படுவதுதான் ஆனுல் இவ்வஸ்து மிகமட்டமான கேவலமானவைகளை உயர்ந்த விலை மதிப்பற்ற பொருளாக மாற்றும் வீரியமுள்ளது என்பது அவரவர் களனுபவத்தில் தானுணர முடியும். சாகாக்கால், வேகாத்தலை- சாகாத்தலை வேகாக்கால் என்ற மாற்றம் உண்டு. இதற்குச்சான்று அகஸ்தியர் பரிபாஷைத் திரட்டு 500-ல் 1வது காண்டம் 79-வது பாடலில்

வேகாத தலையன்ருேயுப்பு உப்பு
மேலானவளர் கலையேயப்பு அப்பு என்கிருர்

வடலூர் இராமலிங்க சுவாமிகள் 6 ஆம் திரு முறையில் வசன பாகத்தில் சுத்த சன்மார்க்கத்தின் மரபு எனுந்தலைப்பில் சாகாத்தலை; வேகாக்கால் எனக் கூறுகிருர்கள். தவிர சிவயநம என்பது சொற் கள் மட்டுமல்ல என்பதற்கு இன்னுமொரு சான்று. மேற்படி 6 ஆம் திருமுறையில் சமய சூக்குமப்பஞ்சாக்ஷரமெனக் கூறப்பட்டுள்ளது. சூக்குமப்பஞ்சாக்ஷரம் எனக் கூறப்படவில்லை சமய எனும் பொருள் படக்கூறப்பட்டுள்ளது. இந்து சமயவேத இதிகாசப் புராணங்கட்கு உட்பட்ட கருத்தாகவே கூறப்பட்டுள்ளது. இந்து சமயம் பூரணம் உதாரணம் இந்துக்கள் பௌர்ணமி (பூரணம்) யை ஒட்டியே விழாக் கள் கொண்டாடப்படுகிறது, பொதுவாகப் பொருள் ஒன்றுதான். ஷசமயசூக்குமப் பஞ்சாக்ஷரமெனுபகுதியில் ஐய்யா அவர்கள் ஏம சித்தி, தேகசித்தி ஆகிய இவற்றை மேற்குறித்தச் சூக்குமபஞ்சாக்ஷ ரத்தில் சொல்வதற்குப் பிரமாணம். சிவயநமவெனச் செம்பு பொன்னு யிடும். சிவயநமவென சிந்திப்பார்க்கு அபாயம் ஒரு நாளுமில்லை ஆதலால் மேற்குறித்த அக்கரத்தை மகான்கள் குழூக்குறியாக வரி

வடிவாய்ச் சுட்டினர்கள். இதை ஆகம அனுபவிகள் தத்துவங்களை யறிந்து அனுசந்தானஞ் செய்வார்கள். சாதகிகள் நாவினுலுண்ணிக் கரணமேயேந்தால் தத்துவானு சந்தானஞ்செய்யக்கூடும்; உலகிகள் நாவினுலுண்ணதங்கள் மனோரதஞ்சித்திக்கும். 'வ'கரவித்தையுடைய வர்கள் மேற்படி அக்ஷரத்தினுண்மையை பௌதீகம், யோகம், ஔஷதம், லவணம் முதலியவற்றில் சேர்த்து வகரவித்தை முடிப் பார்கள். தகரவித்தை யுடையவர்கள் இதுபோலவே யமைத்துக் கொண்டு தேகத்தை நீடிக்கச் செய்வார்கள். ஆதலால் மேற்குறித்த அக்ஷரங்கள் பரிபாஷை இதனது உண்மையாயுஞ் சுத்த சன்மார்க்க சகஜ சாத்யஞானனுபவிக்கு விளங்கும் என்கிருர்கள். ஆகவே சிவயநம என்பது உண்மை வஸ்த்துவின் சொற்றொடர் பெயரான தால் சிவயநம எனும் வஸ்த்துவினுல் முடிவுறுஞ் செயல்களைத் திட்ட மாகக் கூறியுள்ளார்கள் உலோகங்கள், மருந்துகள், உப்புக்கள் இவைகளை யாவும் நாம் நினைத்தபடி செய்து முடிக்க சிவயநம என ஜெபித்துக் கொண்டோ அல்லது சிவயநம எழுதிச் சேர்த்தோ செய் தால் மருந்துகளாகவோ மாற்று உலோகமாகவோ முடியுமா? சிந் தனைக்குரியது. மேற்படி நூலில் ஐயா அவர்கள் அருளிய அனுபக்ஷ சர்புபக்ஷ சுவர்ண தேகிகளின் அநுபவ் விபரம் எனுந்தலைப்பும்.....,... கலியுகத்தின் முடிவு எனுந்தலைப்பும் முன்கூறப்பட்டத் தீக்ஷாவிதி களின் ரகஸியக் கணிதவழி முறைகளாகும். எனவே வகாரம் சிகாரம் எனக்கூறப்படும் பிராணவாயு கூடிய அக்கினி 'ய.காபந்தியே பிராண வாயுவை வளர்க்கும் தீசுழு முனை கணபதி என்பதற்குச் சான்றுமச்ச முனிநிகண்டு 196-ல் 75–76-வது பாடலில்

75 இருக்குஞ்சுழிமுனை ரீங்காரத்தின்மேல்
இருக்கின்ற வாசிவகார சிகார
இருக்கின்ற சத்திற்குண்ட லிக்குள்ளே
இருக்கும் பிரணவமெய்யுங் கணேசன்

76 கணேசனிருப்பான் பஞ்ச பூதத்தால்
கணேனற் கிருபையாலைந்து
மணமானல் வழங்குமே வையங்கான்
குணமான விக்கினேஸன் கூறே

என்கிருர்

இவ்வகார சிகார வஸ்ந்துவை பூ. இலை, காய் செடி என நந்தீஸர் நிகண்டு 300 ல் கூறியுள்ள பாடல்

181 பூடென்றல் 'ந.காரத்தில் பூத்ததுண்டாம் ந
புகலாது யெவ்விதமும் புத்திவேண்டும்
கூடென்றல் 'சி.காரத்தில் செடியாமூலி சி
கூரான நூல்பராக் குருடர்க்காகா
நூடென்றல் 'வ.காரத்தில் காயாமூலி வ
துஷ்ட்டக் குணவான்களுக்குத் தூரம்தூரம்
பாடென்றல் அகாரத்தி லண்டமாச்சு ய
பரிவா மின்னுன்கு மாதிமூலிதாமே

182 தானென்ற 'ந.ம்மதிலே இலையதாச்சு ந
தவராது 'ய.ம்மதிலே பட்டையாச்சு ய
போமென்ற 'வ.ம்மதிலே பூவுமாச்சு வ
பொருளான 'சி.ம்மதிலே காயுமாச்சு சி
ஆமென்ற பூளிதமும் அங்கமாச்சு
அவ்விலது தானூத வங்கமாச்சு
சாமென்ற அண்டமே நங்கமாச்சு
சதமாகும் அண்டரன சிங்கமாச்சே என்கிறுர்

(தொடரும்)

சென்ற மாதத் தொடர்ச்சி



மூலிகை மருத்துவ ஆராய்ச்சி அனுபவங்கள்

மருத்துவர் க. வேங்கடேசன், எம்.ஏ., பிஎச்.டி.,

நுரையீரல் பாதுகாப்பு வழிகளும் நோயுற்றால் தீர்க்கும் முறைகளும்

விளையாடும்பொழுது, ஓடும்பொழுது அல்லது வேகமாக ஒரு வேலை செய்யும்பொழுது சுவாசித்தல் துரிதமாகவும், ஓய்வு எடுக்கும் பொழுது அல்லது தூங்கும்பொழுது நிதானமாகவும் நடைபெறும்.

கரியமிலவாயு சுவாசித்தலுக்கு ஊக்கம் கொடுக்கிறது என்ற காரணத்தால், மூச்சுத் திணறும் நோயாளிக்கு செயற்கை சுவாசித்தல் அளிக்கும்பொழுது பிராணவாயுவுடன் கரியமிலவாயுவையும் கலந்து அளிக்கப்படுகிறது. குழந்தை பிறந்தவுடன், இக்கரியமிலவாயுவை செலுத்தி, சுவாசித்தலுக்கு ஊக்கம் கொடுக்கப்படுகிறது. சராசரி சிறுகுழந்தை ஒரு நிமிடத்தில் 40 தடவையும், சுமார் 12 வயது சிறுவன் அல்லது சிறுமி சுமார் 25 தடவையும் சுவாசிக்கிறார்கள் என்று கணக்கிடப்படுகிறது.

நாம் உள்ளிழுக்கும் காற்று பிராணவாயு அதிகமாகவும், வெளிக் காற்றின் வெப்ப நிலைக்கு ஏற்றதாகவும் இருக்கும். ஆனால் வெளி விடும் காற்றில் பிராணவாயுவின் அளவு குறைந்து, கரியமிலவாயு வின் அளவு அதிகரித்து நீராவி அதிகமாகவும், உடலின் வெப்ப நிலையை ஒத்ததாகவும் இருக்கும்.

சுவாசித்தல் எப்பொழுதும் கூடுமானவரை மூக்கினால் நிகழு தல் சிறந்தது. அதன்பயனாக அசுத்தங்கள் அகற்றப்பட்டு, காற்றின் தட்ப-வெப்பநிலை சீராக்கப்பட்டு உடலுக்குள் செல்கிறது. வாயினால் சுவாசிப்பதனால், தொடையில் சதை வளர்தல் (டான்சில்) மூக்கு அடைப்பு (அடினாய்டுகள்) போன்ற கோளாறுகள் ஏற்படலாம். பற்கள் கோணலாக வளரும். முகத்தில் எப்பொழுதும் அசடு வழியும் வாய் எந்நேரமும் திறந்தபடியே இருக்கும்; அறிவு குன்றும், உச் சரிப்பு தெளிவாக இருக்காது.

சுவாசித்தலில் அவ்வப்பொழுது ஏற்படும் மாறுதல்களினுல் 'பெருமூச்செறிதல்' மயக்கத்தினுல் அல்லது மன உணர்ச்சியால் அடிவயிற்றுத் தசைகளின் மாற்றமும், நுரையீரல்களின் திடீர் சுருங்கி விரிவதலினுலும் ஏற்படும். விக்கல் ஏற்படக்காரணம் திடீரென்று காற்றை உள்ளிழுப்பதனுல் உதரவிதானம் துடித்து, குரல்வளை மூடி திறக்காமல் இருப்பதால் குரல் நாண்களில் ஏற்படும் ஒலி. இரைப்பையின் சவ்வுபோன்ற சுவர் பரபரப்பு அடைவ்தால்கூட இது நிகழும் ஆழ்ந்த உள்மூச்சின் விளைவாக 'இருமல்' ஏற்படும். குரல்வளையிலுள்ள தசைகள், குரல்வளை மூடியை இறுக மூடிக்கொள்வதாலும், திடீரென்று காற்று மூச்சுக்குழலில் இருந்து வெளியேற முயற்சிப்பதாலும் ஏற்படுகிறது. இருமலின் மூலமாக சுவாசக் குழாயிலுள்ள அடைப்புகளை வெளியேற்ற, அகற்றப்பட அனுகூலமாக இருக்கும். 'தும்மல்' ஏற்படுவதும் இருமலைப் போலவேதான். ஆனுல் நாக்கு, வாயின் கூரைப்பாகத்திற்கு உயர்த்தப்பட்டு, காற்றை நாசித்துவாரங்களின் மூலமாக செலுத்துவதால் ஏற்படும்.

இக்காரணத்தினுல்தான் நெடியுள்ள பொருள்கள் அல்லது அவற்றின் ஆவி நாசித்துவாரத்திற்குள் நுழைவதால் தும்மல் ஏற்படும். நெடி தீவிரம் அதிகமாக ஆக தும்மலின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். நன்ருக வாய்விட்டுச் சிரித்தால், அடிவயிற்றுத் தசைகளுக்கு ஓர் ஆரோக்கியமான பயிற்சி ஏற்படுவதுடன் ஒரு நல்ல 'டானிக்' போல் வேலை செய்வதாகவும் கருதப்படுகிறது.

'கொட்டாவி' விடுதல் என்பது நீண்ட உள்மூச்சு இழுப்பதனுலும், முகம் மற்றும் வாயின் தசைகள் நீட்சி அடைவதாலும் ஏற்படும். அஜீரணம், களைப்பு, நல்ல சுத்தமான காற்றின்மை, போதிய அளவு தூக்கமின்மை காரணமாக இது ஏற்படலாம். 'அழுதலும்' மேற்சொன்ன வகையிலேயே நடைபெறும் ஒரு நிகழ்ச்சி திடீரென்று வெளிமூச்சு விடுவதும் ஆழ்ந்த உள்மூச்சும், கண்ணீர் தாக்கப்படுவதும், முகத்திலுள்ள தசைகள் விகாரமாக சுருங்கி விரிதலும இதன் அறிகுறிகளாகும்.

உடல் ஆரோக்கிய நிலையில் இருக்க, நாம் தினந்தோறும் குறிப்பிட்ட நேரத்தில் ஒழுங்காக திறந்த வெளியில் 'ஆழ்ந்த சுவாசப் பயிற்சி' செய்ய வேண்டும். இதனுல் தசைகளுக்கு வ்லிவும் வனப்பும் ஏற்பட்டு, இரத்தம் சுத்தமடைந்து, நோய் வராமல் தடுக்க உதவும். இதையே பல்லாண்டு காலமாக யோகிகள்.' "யோகாசன வழி" யாகப் பின்பற்றி 'பிராணுயாமம்' போன்ற (அதாவது மூச்சை அடக்குதல்) பயிற்சிகளில் வெற்றி கண்டு அதன் விளைவாக பல அற்புதங்களை நிகழ்த்தி இருக்கிருர்கள் என்று தெரியவருகிறது. நாமும் அம்மாதிரி வழிகளைப் பின்பற்றி நலனும் பலனும் அடைவோமாக.

—தொடரும்

கண்ணப்பரின் மூலிகை மருத்துவம்

குட்ட நோய் நீங்க

கடுக்காய் இலை, வேர், காய், பூ, பிஞ்சு, மரப்பட்டை, வேர்ப் பட்டை ஆகியவைகளை சேகரித்து வெய்யிலில் உலர்த்தி, இடித்து மெல்லிய துணியில் சலித்து வைத்துக் கொண்டு ஒரு தேக்கரண்டி வீதம் காலை, மாலை பசும்பாலில் உட்கொண்டுவர கருமேகப்படை. செம்மேகம், குட்டம், வெண்குட்டம், கிரந்தி, சில்விடம், வண்டுகடி ஆகியவை போகும். நோய்க்கு ஏற்றபடி 1 மண்டலம் உட்கொண்டு புகை, பொடி, காரம், புளி, போகம் இவைகளிலிருந்து விலகி சாந்த மான ஆகாரங்களை உட்கொண்டுவர மேற்குறிப்பிட்ட நோய் எல்லாம் நீங்கும்.

கசகசா லேகியம்

கசகசா, வால்மிளகு, பாதாம் பருப்பு, கற்கண்டு சமன் அளவு எடுத்து இடித்து, தேன் போதுமான அளவு சேர்த்து லேகிய பதமாக கிளறி வைத்துக் கொண்டு சுண்டை அளவு சாப்பிட்டு பால் குடித்து வர விந்து விருத்தியும், உடலுறவும் பலப்படும்.

கோடாசூரி மாத்திரை

கோடகசாலைப் பூண்டின் இலைச் சமூலத்தை எடுத்து இடித்து சாறு பிழிந்து, சுத்தி செய்த வாளம், கோதுமை மாவு, லவங்கம் இவைகளை சமமாக எடுத்து இடித்து மேற்படி சாற்றால் அரைத்து மெழுகுபோல் பதம் வந்ததும் எடுத்து உளுந்து அளவு மாத்திரை களாக உருட்டி நிழலில் உலர்த்தி எடுத்து ஒரு புட்டியில் அடைத்துக் கொள்ளவும். இதற்குத்தான் கோடாசூரி மாத்திரை என்று பெயர்.

பிறந்த குழந்தைக்கு 1 மாத்திரையும், 5 முதல் 7 வயதுவரை 2 மாத்திரையும் 10 வயதுக்கு 3 மாத்திரையும், அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கட்கு 4 முதல் மாத்திரையை தூள்செய்து காலையில் வெறும் வயிற்றில் வெந்நீர் கலந்து கொடுக்க நன்கு பேதியாகி மலக் குடல் சுத்தமாகும். அத்துடன் வாத, பித்த கபம், கணை மாந்தம், ஆஸ்துமா, இழுப்புபோல வரும் நோய்களை எல்லாம் தடுத்து அதிருட்டையும் தணிவித்துவிடும் சக்தி இந்த கோடாசூரி மாத்தி ரைக்கு உண்டு.

மூத்திரத் தடை, மூத்திர எரிச்சல் நிற்க

கரும்பின் வேர் 60 கிராம், சோம்பு 10 கிராம், மிளகு 5 கிராம், வெட்டிவேர் 5 கிராம் இவைகளைச் சிதைத்து மண்சட்டியிலிட்டு அரைபடி நீர்விட்டு காய்ச்சி வடிகட்டி தினம் 3 வேளை குடிக்க மூத்திரத்தடை, எரிச்சல் ஆகியவை நீங்கும்.

நாள்பட்ட மூலம், குன்ம நோய்கட்கு

புளியாரைக் கீரையை அரைத்துப் பசுவின் மோரில் கலந்து காலைவேளை மட்டும் 1 மண்டலம் உட்கொண்டு புளி, காரம் குறைத்து கொண்டால் வயிற்றில் உள்ள ரணம் குன்ம நோய்கள் நாள்பட்ட மூலநோய்கள் யாவும் விலகும். புளியாரைக் கீரையும் காயகல்ப மூலிகைகளில் ஒன்ருகும்.

காது, மூக்கு, தொண்டை வியாதிகள்

திருநீற்றுப்பச்சை இலை, கற்பூரவல்லி இலை, மஞ்சள் கரிசலாங் கண்ணி இலை, இவை மூன்றும் வகைக்கு 100 கிராம், சுக்கு, மிளகு, திப்பிலி இவை மூன்றும் வகைக்கு 15 கிராம். இவைகளை அம்மியில் வைத்து மைபோல் அரைக்கவேண்டும். மெழுகு போல் ஆனதும் அதனை சிறிய சுண்டைக்காய் அளவு உருண்டையாக உருட்டி ஒரு பீங்கான் தட்டில் போட்டு நிழலில் உலர்த்தி நன்கு காய்ந்துவிட்ட பிறகு ஒரு புட்டியில் அடைத்து வைக்கவும். தினமும் காலை. மாலை 1 மாத்திரை விதம் சிறுவர்கட்கு வாயிலிட்டு காய்ச்சிய பசும்பால் கொடுத்து வரவும். இதனுல் தீரும் வியாதிகள்—தொண்டையில் சதை வளர்தல் (டான்சில்) ஆபரேஷன் இன்றியே 40 நாட்களில் தீரும். மூக்கில் சதை வளர்தல், பீனிச மூக்கு, அடிக்கடி இருமல், தும்மல் வந்து மூக்கு அடைபட்டு மூச்சுவிட கஷ்டம் இவையும் ஆபரேஷன் இன்றி நீங்கும்.

— தொடரும்

கிரகங்களும் நோய்களும்

புதன்	சுக்கிரன்	சந்திரன்
குரு	சூரியன்	செவ்வா
கேது	சனி	ராகு

மானிடமாகிய நமது சரீரத்திடமாயுள்ள அவயவங்களில் கிரகங்கள் நிற்கிறயிடமாவன.

தலையாகிய-கபாலம் அங்காரகனென்னும் செவ்வாய்க்குரியயிடம். முகம் சுக்கிரனுடையயிடம். கழுத்து புதனுக்குரியயிடம். மார்பு சந்திரனுக்குரியயிடம். வயிறுசூரியனுக்குரியயிடம். அரைகுருவுக்குரியயிடம். துடை சனிக்குரியயிடம். கால்கள் ராகுவுக்குரியயிடம். கேதுவுக்கும் சொல்லத்தகுமாம்மென்பார்கள்.

தலைக்குரிய அங்காரகனால் தலைநோய் மண்டைக் குத்து இவைகளுண்டாகுமாம். முகத்துக்குரிய சுக்கிரனால் கண் வியாதிகள் பற்பலவும் உண்டாகுமாம். கழுத்துக்குரிய புதனால் கழலைக்கட்டி நெஞ்செரிப்பு கபம் முதலானவையுண்டாம். மார்புக்குரிய சந்திரனால் மாரபு நோய் சீதளம் இத்தகைய வியாதியுண்டாம். வயிற்றுக்குரிய சூரியனால் வயிற்றுநோய் நீராம்பல் முதலிய வியாதியுண்டாம். அரைக்குரிய குருவினால் மூலவியாதிகள் பலவுண்டாம். துடைக்குரிய சனியினால் கால்முடக்கு கரும்படைகள் முதலானவை வயுண்டாம். காலுக்குரிய இராகுவினால் விஷங்கள் முயல்வலி குறைநோய் சம்பந்த வியாதிகளுண்டாம்.

முக்கிய குறிப்புகள்

மேற்கூறிய கிரகங்கள் தங்கள் தங்களுக்குரிய இராசிகளிலேனும் நட்பு-ஆட்சி-யுச்சமம் - திரிகோணகேந்திரமேறியும் சுபக் கிரகசம்பந்த பார்வைபெற்றேனும் எவ்வித குறைபாடுகளுமில்லாமல் ஜெனனகாலத்தில் சமரசப்பட்டிருக்குமாயின் அப்படி ஜெனிப்பவனுக்கே அந்தந்த கிரகத்தின் திசாபுத்தி அந்தரபலன்கள் முற்றிலும் குறைவின்றி கொடுப்பதன்றி அந்தியமட்டும் திரவிய ஆபரண வஸ்திர போஜன வாகன அதிகார சௌக்கியங்களோடு ஈகை இரக்கம் தயை தானமுள்ளவனுயும் இகபரசௌக்கியமெய்துவானென்பார்கள்.

அப்படி அல்லாமல் லக்கினதிபதியானவன் 6-8-12 இந்ததான மேறியும் அல்லது பகைநீச்சம் பெற்றும் பாபக்கிரகசம்பந்தப்பட்டுமிருக்குங்காலத்தில் ஜெனிப்பானேல் மேற்கூறிய வியாதிகளும் தரித்திர துன்பங்களும் விஷம் முதலான பைசாச துர்சம்பந்தமான வெறுப்புமுண்டாமென்றறியவும்.

கிரகநிலைக் கொண்டு வியாதியறியும் குறிப்புகள்

யாவர்க்கேனும் ஜென்மவீட்டில் ஜென்மாதியனுடன் சூரியன் கூடியிருக்கில் எப்பொழுதும் பித்தரோகம் வாதிக்குமென்றறிக.

ஜெனனவீட்டிலும் 7-மிடத்திலும் ஜென்மாதியும் இராகுகேதுக்களுடன் கூடியிருக்கில் குட்டநோய் வந்தெய்துமென்றறிக.

ஜென்மவீட்டிலேனும் எட்டாமிடத்திலேனும் சந்திரனானவன் பாபக்கிரகங்களுடன் கூடியிருக்கில் சயரோகம்வந்தெய்துமென்றறிக.

ஜென்மவீட்டில் குஜனும் புதனும் கூடியிருக்கினும் இரண்டாமிடத்திலிருக்கினும் சுரரோகம் பீடிக்குமென்றறிக.

ஜென்மாதிபன் நீச்சம் பெற்றிருப்பானேல் பிரமிய ரோகம் வந்தெய்து மென்றறிக.

ஜென்மத்தில் செவ்வாயிருக்க ஜென்மத்தைப் பாபக் கிரகங்கள் பார்த்தாலும் ஜென்மாதிபன் எட்டில் பாபருடன் கூடி யிருக்கினும் மூலவியாதி வந்தெய்துமென்றறிக;

ஜென்மத்தில் சனியும் சந்திரனுமிருக்கவும் பாபக் கிரகங்களிருக்கினும் ஆருமிடத்துக் கிரகம் இரண்டிலிருக்க குன்மரோகம் வந்தெய்துமென்றறிக.

ஜென்மாதிபன் 5-ல் 7-ல் 10.ல் இருக்க ஜென்மத்தில் செவ்வாயிருக்கினும் நல்லோர் பார்வை இல்லாதிருக்கில் அதிசார ரோகம் வந்தெய்துமென்றறிக.

ஜென்மாதிபன் குருவாகவும் மூன்ருமிடத்தில் இராகு வும் அல்லது மூன்ருமதிபனைக் கூடியிருந்தாலும் அண்டவாத ரோகம் வந்தெய்துமென்றறிக,

ஜென்மாதிபதி எட்டாமிடத்திலும் எட்டாமிடத்ததி பன் ஜென்மத்திலும் சனி சந்திரன் பாபக்கிரகங்களுடன் கூடில் உருவில்லா ரோகம் அதாவது நிர்ணயிக்கப்படாத பற்பல நோயணுகுமென்றறிக.

ஜென்மாதிபன் குளிகனுடன் கூடியிருக்க சந்திரன் சனி ஆறில் பனிரெண்டிலிருக்க ஆருமிடத்தானும் எட்டா மிடத்தானும் நீச்சம் பெற்றிடில் பல பிணியால் மரணம் வந்தெய்துமென்றறிக.

ஜென்மாதிபனுடனுகிலும் மூன்ருதிபனுடனுயினும் புதன் செவ்வாய் கூடியிருக்கில் நீரிழிவு ரோகமும் நீர்துவார மும் இரண்டாகுமென்றறிக. மேற்படி கிரகங்களுடன் சனி கூடியிருக்கில் நீர்தாரையில் கல்லடைப்பு ரோகமுண்டாகு மென்றறிக.

ஜென்மாதிபன், செவ்வாய் அல்லது புதனுயிருந்து இவர்கள் மிதுனம் கன்னியிருக்க புதன் பார்க்க ஆசனத்தில் பல வியாதிகள் அணுகுமென்றறிக.

ஜென்மாதிபனுடன் பாபக்கிரகங்கள் சேர்ந்தாலும் செவ்வாய் சசிதமானலும் பார்த்தாலும் கல்லடியால் மரணம் நேரிடுமென்றறிக.

ஜென்மாதிபனுடன் குளிகன் இராகுகூடி லக்கினத்தில் நின்ருலும் குளிகன் திருகோணமேறினும் எட்டாமிடத்தில் நிற்கினும் குளிகன் நாலாமதிபனுடன் கூடினும் அண்டம் பெருத்து வருமென்றறிக.

ஜென்மாதிபனும் சூரியன் செவ்வாய் புதன் கூடினும் ஆருமிடத்தில் எட்டாமிடத்தில் இருந்தால் செங்குஷ்டம் சம்விக்குமென்றறிக.

ஜென்மத்தில் இராகுவும் மூன்ருமிடத்தில் சனியும் இருக்க அண்டம் பெருத்து வருமென்றறிக.

ஜென்மாதிபனுங் ஆருமிடத்ததிபனும் குஜனுடன்கூடி ஜென்மத்திலிருக்கில் அதிசார பேதியுண்டா மென்றறிக.

ஜென்மத்தில் சூரியன் செவ்வாய் கூடியிருக்கில் குன்ம வியாதி பெருமூச்சு இவையுண்டாகு மென்றறிக

ஜென்மாதிபனுடன் குஜன் கூடியிருக்கையில் பாபக் கிரகங்கள் பார்க்கில் தலையில் கல்லடி காயம் படுமென்றறிக.

ஜென்மத்தில் சனி-இராகு கூடியிருக்கில் பேய் பிடிப்ப துடன் மாந்திரீக துன்பம் வருமென்றறிக.

ஜென்மத்தில் செவ்வாயிருக்கையில் தீபக்கிரகங்கள் பார்க்கில் அடிவயிற்றில் வலி காணுமென்றறிக.

ஜென்மாதிபன் ஆருமிடத்ததிபன் இராகு இம்மூவரும் ஒரு வீட்டில் கூடியிருக்கில் அரவங்கடித்து மரணமென்றறிக.

ஜென்மாதிபனுடன் இராகு கேது கூடியிருந்தால் காவலிலிருக்கும்போது மரணம் சம்பவிக்குமென்றறிக.

ஜென்மாதிபதி பாவியாயிருந்து சனி சம்பந்தப்பட்டு இருப்பானேல் விஷபட்சனம் செய்து மரணமாவானென்று அறிக.

ஜென்மகேந்திரத்தில் சுக்கிரனும் சந்திரனும் இருக்க பாபக்கிரகங்கள் ஐந்தில் எட்டிலிருக்க முயல்வலி ரோகம் வந்தெய்து மென்றறிக

ஜென்மலக்கினத்தில் பரிவேடம் மூன்றில் எட்டில் குகனும் திருகோணத்தில் குருவில்லாதிருக்கில் குமரகண்ட வலி வந்தெய்துமென்றறிக.

ஜென்மத்தில் செவ்வாயிருக்க இரண்டில் எட்டில் ஜென்மாதிபன் இருக்க கேந்திரத்தில் நல்லோரில்லா திருக்கில் தேகமுழுமையும் வியாதி யுண்டாமென்றறிக.

ஜென்மாதிபன் குசன்-புதன்-இராகு-கேது இவர் ஏக வீட்டில் கூடியிருக்கில் குஷ்டரோக முண்டாமென்றறிக.

ஜென்மாதிபனுடன் சூரியன் அங்காரகன் கூடியிருக்கில் ரத்த குஷ்டம் வந்தெய்து மென்றறிக. — (முற்றும்)


ஆசிரியருக்குக் கடிதம்

ஆசிரியர் அவர்கட்கு, வணக்கம்!

குமுதத்தில் தங்கள் பேட்டியின்போது 'புற்றுநோய்' எக்ஸ்ரே கதிர் வீச்சாலும் ஏற்படுகிறது என்று கூறியுள்ளீர்கள். இதற்கு மறுப்பு தெரிவித்து சென்னையைச் சேர்ந்த டாக்டர் ஒருவர் குமுதம் பத்திரிக்கையில் எழுதியுள்ளார். தாங்கள் கூறிய கருத்து சரி என்பதை சில டாக்டர்கள்ஒத்துக் கொள்ளுகிறார்கள். திருச்சியிலிருந்து வெளியாகும் தினகரன் நாளேட்டுக்கு (23—11—83) சென்னை ராயப்பேட்டை மருத்துவமனையில் பணிபுரியும் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் சந்திரசேகர் பேட்டியளித்துள்ளார். எக்ஸ்ரே கதிர் வீச்சாலும் புற்றுநோய் எற்படுமென்று பேட்டியில் கூறியுள்ளார். "The Nature of Cancer" என்ற நூலை எழுதிய டாக்டர்கள் கோத்தாரி&மேத்தாவும் புற்றுநோயை ரேடியோ கதிர்வீச்சுகள் மூலம் குணப்படுத்தும்போது நோய் பரவுகிறது என்று கூறுகிறார்கள். இப்படிக்கு,

S. கிருஷ்ணமூர்த்தி, B.A.B.L.,
துறையூர்.

மூலிகைமணி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர், ஆசிரியர்;
டாக்டர். க. வேங்கடேசன்
4, இரண்டாவது சாதுகாரமடம் வீதி, வேலூர்-1.



பார்த்தீனியம் விஷ முறிவுக்கு குப்பைமேனி

'குப்பைமேனி' செடிகளை வேருடன் பிடுங்கி தூய்மை செய்து நிழலில் உலர்த்தி காய்ந்தபின் நன்கு பொடி செய்து தினம் காலை மாலை 5 சிட்டிகை முதல் 10 சிட்டிகை அளவு நெய்யில் குழைத்து உண்டு வரவும் 40 நாட்கள் இவ்விதம செய்துவர விஷம் முறியும். விஷ பாதிப்பால் சர்மத்தில் கொப்புளம், அரிப்பு இருந்தால் குப்பைமேனி இலையுடன் சிறிது மஞ்சள், தும்பை இலை ஆகியன சேர்த்து அரைத்து குளிப்பதற்கு முன் சர்மத்தின்மேல் பூசி கால் மணி நேரம் கழித்து குளித்து வரவும். டாக்டர் க. வேங்கடேசன்.